Registered as a NewsPaper

விலை ரூபா-7.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-12

நாதம் -15 | திருவள்ளுவர் ஆண்டு- 2035 | மார்கழி-11 | 26-12-2004 | ஞாயிற்றுக்கிழமை | ஓசை -312

S.M கோல்ட் ஹவுஸ்

வவுனியா நகரில் அசல் 22 கரட் தங்க நகைகளை உங்கள் விருப்பத்திற்கேற்ப தெரிவு செய்து பெற்றுக்கொள்ள



S.M கோல்ட் ஹவுஸ்

இல:-46A, தர்மலிங்கம் வீதி, வவுனியா.

(சி-10930) T.P: 024-222 4247

## - புலிகளால் நிராகரிக்கப்பட்ட -

# புதிய நிகழ்ச்சி நிரல் குறித்து

# ஜே.வி.பி எழுப்பும் சர்ச்சை!



## தம்மிடம் காண்பிக்கப்படவில்லை என சீற்றம்

(கொழும்பு)

**விடுதலைப்புலிகளால் நிராகரிக்கப்பட்டுவிட்டதான அரசாங்கம் சமர்ப்பித்த சமாதான முயற்சிகள் தொடர்பான புதிய நிகழ்ச்சி நிரல் தமக்குக் காண்பிக்கப்படவில்லை என ஜே.வி.பி குற்றம் சாட்டியுள்ளதோடு அது குறித்து தமக்கு விளக்குமாறு வேண்டுகோள் விடுத்துள்ளது.**

இது குறித்து இணையத்தளம் ஒன்று வெளியிட்டுள்ள செய்தியில் சமாதான முயற்சிகள் தொடர்பான புதிய நிகழ்ச்சி நிரல் குறித்து தம்முடன் கலந்துரையாடாமல் விடுதலைப்புலிகளுக்கு அதனை அனுப்பி வைத்தமை தொடர்பில் தமக்கு விளக்கமளிக்க வேண்டுமென பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ரத்னஸ்ரீ விக்கிரம நாயக்கவிடம் ஜே.வி.பியின் செயலாளர் ரில்வின் சில்வா கோரியுள்ளதாக இவ் இணையத் தகவல் தெரிவிக்கின்றது.

இவ்வார ஆரம்பத்தில் சிறிலங்கா அரசாங்கத்தால் சமர்ப்பிக்கப்பட்ட புதிய நிகழ்ச்சி நிரலை புலிகள் நிராகரித்துள்ளதுடன் அமைதித் தீர்வுக்கான சமாதானப் பேச்சு வார்த்தைகளை மீண்டும் ஆரம்பிப்பதாயின் தெளிவான துலக்கமான திட்டவட்டமான வரையறைகளைக் கொண்ட நிகழ்சி நிரலை அரசாங்கம் முன்வைக்க வேண்டுமெனவும் கோரிக்கை விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (32)

## மின்சாரசபை ஊழியருடன் பேச்சு

இலங்கை மின்சார சபை ஊழியர்களின் பிரச்சினையைத் தீர்க்கும் வகையிலான பேச்சுவார்த்தை அடுத்த வாரம் இடம் பெறவுள்ளது. அமைச்சர் சுசில் பிரேம் ஜயந்த மேல் கொத்மலை மற்றும் நுரைச்சோலை மின்சார மையங்களை ஆரம்பிப்பது தொடர்பாகவே கலந்துரையாடப்படவுள்ளது.

இதேவேளை மின்சாரசபை ஊழியர்களின் வேதன உயர்வு உட்பட்ட ஏனைய நிர்வாகப் பிரச்சினைகளும் இந்தப் பேச்சுவார்த்தைகளில் கலந்துரையாடப்படவுள்ளன. (32)

## வடக்கு-கிழக்கு மாகாண ஆளுநரின் யாழ்.விஜயத்திற்கு எதிர்ப்பு

வடக்கு கிழக்கு மாகாண ஆளுநரின் யாழ். விஜயத்திற்கு எதிர்ப்பினைத் தெரிவிக்க பல்வேறு அமைப்புக்களும் தயாராகி வருகின்றன.

வடக்கு- கிழக்கு மாகாண ஆளுநர் டிரோன் பெர்னாண்டோ எதிர்வரும் 29ஆம் திகதி யாழ். குடாநாட்டிற்கு வருகைதரவுள்ளார்.

யாழ். குடாநாட்டில் நிலவும் சட்டம் மற்றும் பாதுகாப்புத் துறை சம்பந்தமாகவும், மாகாண சபையின் கீழ் நிர்வகிக்கப்பட்டு வரும் திணைக்களங்களினது நடவடிக்கைகள் தொடர்பாகவும் யாழ். வரும் இவர் பலாலி படைத் தலைமையகத்தில் யாழ். மாவட்டத்தின் இராணுவ அதிகாரிகள் பலரையும் சந்திக்கும் முக்கிய கலந்துரையாடலை நடத்துவதுடன் பாதுகாப்பு வலயப் பகுதிகளையும் சென்று பார்வையிடுவார்.

அரசின் போராயத்த நடவடிக்கைகளினை எதிர்த்து தமிழ் மக்கள் வெகுஜனப் போராட்டங்களில் குதித்துள்ள (12ஆம் பக்கம் பார்க்க)

## வடக்கு-கிழக்கில் 60 வீத மாணவர்கள் போசாக்குக் குறைவால் பாதிப்பு

(வவுனியா செய்தியாளர்)

வடக்கு-கிழக்கில் 60 சதவீதமான மாணவர்கள் போசாக்குக் குறைவால் பாதிக்கப்பட்டுள்ளனர் என ஜி.ரி.இசற் நிறுவனத்தின் வவுனியா மாவட்டப் பணிப்பாளர் சுந்தரம் டிவகலாலா தெரிவித்துள்ளார்.

வவுனியா மாவட்ட கல்வி அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அங்கு மேலும் உரையாற்றுகையில், வடக்கு-கிழக்கில் 6 இலட்சத்து 90 ஆயிரம் மாணவர்கள் கல்வி கற்கின்றனர். இவர்களில் ஏறத்தாழ 60 சதவீதமான மாணவர்கள் போசாக்குக் குறைவால் பாதிக்கப்பட்டுள்ளனர். 6 இலட்சத்து 90ஆயிரம் மாணவர்களில் 2 இலட்சத்து 90 ஆயிரம மாணவர்கள் மன நெருக்கடிக்குள்ளாகியுள்ளனர் என்றார். (10)

## யாழ்.நகர் எழுச்சிப் போராட்டங்களுக்கு பல்வேறு அமைப்புகளும் ஆதரவு

(யாழ்ப்பாணம்)

அரசு யுத்த ஆயத்த நடவடிக்கைகளைக் கை விட்டு புலிகளின் இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபை அடிப்படையில் சமாதானப் பேச்சுக்களை உடனடியாக ஆரம்பிக்க வேண்டும் என்பதை வலியுறுத்தி நாளை முதல் நான்கு நாட்களுக்கு யாழ். குடாநாடெங்கிலும் மக்கள் எழுச்சிப் போராட்டங்களும், மனித சங்கிலிப் போராட்டங்களும் நடைபெறவுள்ளன.

யாழ். குடாநாட்டில் பிரதான வீதிகள், சந்திகள் என்பவற்றை மையமாகக் கொண்டு இடம்பெறவுள்ள இம் மாபெரும் மக்கள் எழுச்சிப் போராட்டங்களில் பெருமளவான மக்கள் ஒன்றினைந்து ஒருமித்த குரலில் உரிமைக் கோஷங்களை முழங்குவார்.

இப் போராட்டத்திற்கு யாழ். மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியம், சர்வதேச தமிழ் மாண (12ஆம் பக்கம் பார்க்க)

## போராட்டத்தில் கலந்து கொள்ள அன்னையர் முன்னணி அழைப்பு

யாழ்.நல்லூர் கோட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியம் முன்னெடுக்கும் சமாதான முயற்சிகளைத் துரிதப்படுத்தவும் இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபையை புலிகளிடம் வழங்குமாறு வற்புறுத்தியும் ஏற்பாடு செய்துள்ள மாபெரும் மனித சங்கிலிப் போராட்டத்திற்கு எமது பூரண ஆதரவை வழங்குவதுடன், நாளை காலை 10.00 மணிக்கு இடம் பெறவுள்ள பருத்தித்துறை வீதியில் மனித சங்கிலிப் போராட்டத்தில் எமது காணாமற் போனோர் பாதுகாவலர் சங்க அங்கத்தவர்களும், அன்னையர் முன்னணியினரையும் யாழ்.ஆரியகுளம் சந்திக்கு அண்மையில் ஒன்றுகூடுமாறு அன்னையர் முன்னணி அழைப்பு விடுத்துள்ளது.

## தமிழர் அவலவாழ்வு தொடரவேண்டுமா? மக்களே சிந்தித்துச் செயற்பட வேண்டும்

### - வடமராட்சி பொது அமைப்புக்கள் ஒன்றியம் கோரிக்கை

(வடமராட்சி)

1948 இல் இலங்கை சுதந்திரம் பெற்ற பின்னர் தமிழ் மக்கள் தொடச்சியாக அனுபவித்து வந்த அவல வாழ்க்கை இன்னும் தொடர வேண்டுமா? சிந்தித்துப்பாருங்கள் இது ஒவ்வொரு தமிழனும் சிந்திக்க வேண்டிய விடயம். இவ்வாறு வடமராட்சி பொது அமைப்புகள் ஒன்றியம் விடுத்துள்ள 'வீரசுதந்திர முழக்கம்' எனத் தலைப்பிட்டு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ் அறிக்கையில் சிறிலங்கா பேரினவாத அரசியல்வாதிகளும் அவர்களால் உருவாக்கப்பட்ட சட்டங்களிலும் இராணுவத்தினராலும் மற்றும் இந்திய இராணுவத்தினாலும் தமிழ் மக்கள் அனுபவித்த கொடுமைகள் பற்றி விபரணப்படுத்தியுள்ளன. மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

ஆயுதபலத்தாலும் அரசியல் பலத்தாலும் உயர்ந்திருக்கும் தமிழினம் தொடர்ந்தும் அர்த்தமற்ற வாழ்வு வாழ்வதா?

(12ஆம் பக்கம் பார்க்க)

## வவு.குடியிருப்பு கல்யாண மண்டபத்திலிருந்து வெளியேற சிறிலங்கா இராணுவம் மறுப்பு

(செட்டிகுளம்)

வவுனியா குடியிருப்பு கல்யாண மண்டபத்தில் இருந்து இராணுவம் விலகி செல்ல முடியாது என்று அரச அதிபருக்கு அறிவித்திருப்பதாக வவுனியா மாவட்ட அரச அதிபர் கே. கணேஷ் தெரிவித்துள்ளார். வவுனியா நகர்ப் பகுதியில் ஏதேனும் அசம்பாவிதம் இடம் பெற்றால் உடனடியாக அதனை முறியடிப்பதற்கு நகர்ப் பகுதியில் அத்தியாவசியமாக முகாம் ஒன்று தேவையாக இருப்பதன் காரணமாகவே இந்தக் கட்டடத்தில் இருந்து வெளியேற முடியாது என்று இராணுவம் தெரிவித்திருப்பதாக அரச அதிபர் தெரிவித்தார்.

புரிந்துணர்வு உடன்படிக்கைக்கு பிரகாரம் பொது மண்டபங்கள் பாடசாலைகளில் இருந்து இராணுவத்தினர் வெளியேறி இருக்க வேண்டும். ஆனால் வவுனியாவில் தொடர்ந்தும் கல்யாண மண்டபம், நெற்களஞ்சியம் போன்ற இடங்களில் இராணுவத்தினரும், விசேட அதிரடிப்படையினரும் தொடர்ந்தும் நிலை கொண்டுள்ளனர் கல்யாண மண்டபம் 1997 ஆண்டு இறுதிப் பகுதியில் கட்டப்பட்டதற்கு இதுவரை எந்த ஒரு பொது நிகழ்வுகளும் நடத்தப்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. கலை கலாசார (12ஆம் பக்கம் பார்க்க)

## கிழக்கில் வெள்ளப்பாதிப்புக்குள்ளானோருக்கான யாழ்.மக்களின் உதவி செவ்வாய் எடுத்துச் செல்லப்படும்

வெள்ள அனர்த்தங்களினால் பெரும் பாதிப்பிற்கு உள்ளாகியுள்ள கிழக்கு வாழ் மக்களிற்கான குடாநாட்டு மக்களினதும் நிவாரண உதவிப் பொருட்கள் எதிர்வரும் 28 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை வாகனத்தொடரணி மூலம் எடுத்துச் செல்லப்படவுள்ளன.

யாழ்.குடாநாட்டின் அனைத்துப்பகுதிகளிலும் பொது அமைப்புக்கள் பலவற்றினாலும் மாணவ சமூகத்தினாலும் உலர் உணவு நிவாரணப் பொருட்கள் சேகரிக்கப்பட்டு வருகின்றது. துரிதமாக இடம் பெற்று வரும் உலர் உணவு நிவாரணப் பொருட்கள் சேகரிப்பில் தொண்டர்களுடன் சேர்ந்து குடா நாட்டின் பல பகுதிகளிலும் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் பலரும் அப்பணியினில் ஈடுபட்டுவருகின்றனர்.

குடாநாட்டின் அனைத்துப் பகுதிகளிலும் சேகரிக்கப்படும் இவ் உலர் உணவு நிவாரணப் பொருட்கள் எதிர்வரும் திங்கட்கிழமையன்று யாழ்.நகரப்பகுதிக்கு அவ்வப்பகுதிகளில் இருந்து எடுத்துவரப்படவுள்ளது. பின்னர் அப்பொருட்கள் தரம் பிரிக்கப்பட்டு அடுத்த தினமான செவ்வாய்க்கிழமை வாகனத் தொடரணிமூலம் கிழக்கு மாகாணத்திற்கு எடுத்துச்செல்லப்படவுள்ளதாக ஏற்பாட்டுக்குழுவைச் சேர்ந்த (12ஆம் பக்கம் பார்க்க)

# எமது வெற்றிகளை மழுங்கடிக்க முயலும் சிங்களத்தின் சதிகளை முறியடிப்போம்

**– முல்லை. மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவை அறைகூவல்**

பொறுமைக்கும் எதிர்பார்ப்பிற்குமான எல்லைக் கோடுகளை அடைந்துவிட்டோம் என எமது உள்ளத்துணர்வுகளை தேசியத் தலைவர் வெளிப்படுத்திவிட்டார். எனவே இதன் தாக்கங்களை விரைவில் நாம் காண்போம். ஆகவே மாற்றமுறப்போகும் தற்போதைய அரசியல் சூழலை மிகத் தெளிவாக புரிந்துகொள்வோம்.

விடுதலைப்பயணத்தில் வீறுடன் நடைபோட ஆயத்தம் ஆவோம். பெரும் ஈகத்தின் விளைவால் பெறப்பட்ட எமது இராணுவ அரசியல் வெற்றிகளை மழுங்கடிக்க முனையும், சிங்களத்தின் சதிகளை அம்பலப்படுத்தி முறியடிப்போம். உலகின் முன் எம் விடுதலைக்குரலை உறுதியுடன் ஒலிப்போம் என முல்லை. மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவையினர் விடுத்துள்ள துண்டுப்பிரசுரத்தில் அறைகூவல் விடப்பட்டுள்ளது.

அமைதிக்காக, நாம் எதுவரை இதுவரை சென்றோம்? போரை இடைநிறுத்தி பேச்சுக்குச் சென்று பேசுவதற்கு இலகுவாக இடைத் தீர்வு ஒன்றை முன்வைத்து அது பற்றியும் பேசுவதற்கு நெகிழ்ச்சியாகவுள்ளோம் என நாம் கூறியிருக்கிறோம். இதன் பின்னரும் அம்மையார் கூறுவதென்ன? இடைக்காலத் தீர்வோடு நிரந்தரத் தீர்வு பற்றியும் பேசவேண்டுமாம். எந்தவொரு தீர்வையும் முன்வைப்பதற்கான தெளிந்த மனமோ, உறுதிப்பாடோ, பலமோ அற்ற நிலையில் அவர் இவ்வாறு கூறுவதன் கபடத்தினைப் புரிவதொன்றும் எமக்குக் கடினம் இல்லை. கூரையேறிக் கோழி பிடிக்க முடியாதவன் வானமேறி வைகுண்டம் போனகதைதான் இது.

இடைக்கால நிர்வாகம் பற்றியோ, ஒற்றையாட்சி யாப்பு மாற்றம் பற்றியோ பேசினாலே அரசாங்கத்தினைக் கவிழ்ப்போம் என ஜே.வி.பி பகிரங்கமாக சவால்விடுகின்றது. நோர்வேயை மிக இழிவாகக் கண்டித்து அனுசரணையாளர் நிலையிலிருந்து வெளியேறுமாறு நிர்ப்பந்திக்கின்றது. ஜே.வி.பியைக் கண்டிக்கவோ, அடக்கவோ வக்கற்ற அம்மையார், புலிகள் பற்றி வாய்க்கு வந்தபடி பேசுவது எத்தகைய கபடத்தனம்? புலிகள் எவ்வளவுதான் விட்டுக்கொடுத்தாலும் பேரினவாத வெறியைக் கிழப்பி பதவிக்கு வரும் தனது மூலோபாயத்தை ஒருபோதும் ஜே.வி.பி விட்டுக் கொடுக்காது என்பது உலகறிந்த உண்மை. ஏனெனில் இந்த வழிகள் எல்லாம் டி.எஸ். ஜே.ஆர்.பண்டா-சிறிமா போன்றோர் வகுத்த வழிகள் அல்லவா? 1957ஆம் ஆண்டு பண்டா செல்வா உடன்பாடு கிழிக்கப்பட்ட காலம் தொடங்கி அண்மைய ரணிலின் ஆட்சி பறிக்கப்பட்டது வரை தொடர்ந்த கதையல்லவா? எனவே அம்மையாரால் என்ன சொல்வதற்கு உள்ளது? இவர்கள் பயன்படுத்திய மிக இழிவான இவ் வழிமுறையினை மிக நவீனப்படுத்தி, மிகத் தீவிரமாக்கி ஜே.வி.பி. பயன்படுத்துவது கண்டு இருகட்சிகளுமே கலங்கியிருப்பதே இன்றைய யதார்த்தம்.

அடுத்த மிகப் பிரதான விடயம் இனப்பிரச்சினைத் தீர்வு பற்றி ஏதாவது கருத்து ஒருமித்த நிலை அதற்கான தலைமை என்று ஏதாவது சிங்களத்தில் ஒரு மித்த நிலை தோன்றியுள்ளதா? அல்லது, அதற்கான எந்த முயற்சியாவது இதுவரை எடுக்கப்பட்டதா? இப்போது எப்போதையும் விட சிங்களத்தரப்பு மிக மோசமாக பிளவுண்டு கிடக்கின்றது. இந்நிலை பேச்சுவார்த்தை முயற்சிகளை மிகப்பெரும் பின்னடைவுக்குள்ளாக்கியிருப்பதை உலக அரசியல் தலைமைகளும், அரசியல் ஆய்வாளர்களும் ஏற்றுள்ளர்கள். தமிழ் தரப்பில் ஒரே தலைமையில், ஒரே குரலில் பேச்சுவார்த்தையை முன்னெடுக்க ஆயத்தமான நிலையில் சிங்களத்தரப்பில் அவ்வாறு இல்லாத நிலையில் எதனை முன்னெடுக்க முடியும்? எனவே இடைக்கால ஏற்பாடு பற்றியாவது இப்போது பேசுவோம் என்ற புலிகளின் நிலைப்பாட்டிற்கு உலக ஆதரவு பெருகிவருகிறது. இப்பொழுது மிகப்பிரதானமான மையமான கேள்விக்கு வருகின்றோம். அம்மையாருக்கு மனம் இருந்தாலும் ஜே.வி.பியினர் எதிர்பார்ப்பால் இடமில்லாமல் போய்விட்டதா? ஜே.வி.பியினர் அச்சுறுத்தலால் தான் அவர் பேசாது இருக்கின்றாரா? இங்கே தான் மர்மங்களும், சதிகளும், வசையங்களும் புதைந்து கிடக்கின்றன. ஜே.வி.பியின் எதிர்ப்பைக் காரணமாக உலகின் முன்காட்டி புலிகளை மேலும் மேலும் விட்டுக் கொடுக்குமாறு அழுத்தம் கொடுக்க வைத்துப் பேச்சுக்களை இழுத்தடிப்பதன் மூலம் புலிகளைச் சிதைவடையச்செய்து பின் போருக்கு இழுத்து முறியடித்துவிடலாம் என்பதே அம்மையாரின் இரகசிய ஆசை. அம்மையாரினது மட்டுமல்ல சிங்களத் தலைமைகளின் இலக்கும் இதேதான். எனவேதான் இவர்கள் எக்கட்சியாக இருந்தாலும் எதிர்க்கட்சியாக இருக்கும் போது தமிழ் மக்களுக்கு எத்தகைய தீர்வும் வழங்கப்படாது இருப்பது தமது பூரண எதிர்ப்பைக் காட்டி உறுதிசெய்வார்கள். இது சிங்களத் தரப்பில் உள்ள எழுதப் படாத உடன்பாடு.

எங்கள் உடன் பிறப்புக்களே! இதுவே உண்மை நிலை. ஆனால், இச்சதியினை முறியடிக்கும் வல்லமையும், அறிவாற்றலும் நிரம்பிய தலைமை எமக்குண்டு. மிகச்சரியான முடிவினை மிகச்சரியான வேளையில் எடுத்து மிகப்பொருத்தமான சூழலில் அதனை நிறைவேற்றுவதே எம் தலைமையின் பலம். எனவே இப்பலத்தினை தக்கவைப்பதற்கும், அதனைப் பயன்படுத்தவும் ஆவன செய்வதே எம் பணி. எம்பக்கம் சாயும் உலகின் கவனத்தினை முற்றாக ஈர்க்கவும் எல்லாவழிகளாலும் சென்று எம் இலக்கை அடையவும் நாம் செய்வேண்டியது விடுதலைப் புலிகளை எல்லா வகையிலும் பலப்படுத்தலே. எனவே எம்மக்களே, 'தெளிவடையுங்கள்' 'உறுதிப் படுத்துங்கள்' 'அணிசேருங்கள்' "போருக்கு முழுமையாக ஆயத்தம் ஆவதே போரைத்தடுக்கும் மிகச்சிறப்பு வழியென்பதை உணருங்கள்" "தேசத்தினையும் காத்துத் தேச நிருமாணத்தினையும் செய்திட இதுவே எம்முன்னுள்ள ஒரே வழி என்பதனையும் அறிந்துகொள்ளுங்கள்'' என மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## வரிவிளம்பரம்

### கேக் செய்து கொடுக்கப்படும்

பண்டிகைக்கால மற்றும் சம்பிரதாய பூர்வவிழாக்களுக்கான சகல வகையான கேக் வகைகளும் விருப்பத்திற்கேற்றபடி செய்து கொடுக்கப்படும். தொடர்புகளுக்கு சித்திரா,கானான், தருமபுரம்.(4948)

### வீடு விற்பனைக்கு

புதுக்குடியிருப்பில் சுவையூற்றுக்கருகாமையில் 1/2 ஏக்கர் காணி, வீடு, கிணறு மலசலகூடம் என்பனவற்றுடன் விற்பனைக்குண்டு. தொடர்புகளுக்கு உரிமையாளர் "இனியவள் அழகுமாடம்" முல்லைத்தீவு. உரிமையாளர் இன்பம் மணிக்கூட்டுத் திருத்தகம், புதுக்குடியிருப்பு. (5071)

### விற்பனைக்கு

நல்லநிலையில் இருக்கும் மூன்று சக்கர மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு உண்டு. கால் ஊனமுற்றவர்களும் பாவிக்க உகந்தது. தொலைபேசி இல: 0777593753 ச.சின்ராசா, நுணாவில் மேற்கு, சாவகச்சேரி. (11159)

### தவறிவிட்டது

செல்வராசா முரளி என்பவருடைய தேசிய அடையாள அட்டை, ஆமி அடையாள அட்டை, சாரதிஅனுமதிப்பத்திரம் உள்ளிட்ட பேஸ் நேற்று (23.12.2004 அன்று பரந்தனுக்கும் பளைக்கும் இடையில் தவறிவிட்டது. இதனை கண்டெடுத்தவர்கள் ஈழநாதம் பணி மனையில் ஒப்படைக்கவும். (5442)

## பதிவுசெய்க

முல்லை. மாவட்டத்தில் இதுவரை பதிவுசெய்யப்படாத அனைத்து வாகனங்களையும் அந்தந்தப் பகுதி கிராம அலுவலரிடம் பதிவுசெய்யுமாறு முல்லை. மாவட்ட அரச அதிபர் திருமதி. இமெல்டா சுகுமார் கேட்டுக்கொள்கிறார். இப்பதிவுகளை மேற்கொள்ளாதவர்கள் எதிர்வரும் 04.01.2005 இற்கு முன்பு பதிவு செய்யப்பட வேண்டும் என்றும் அவ்வாறு பதிவுசெய்யாத வாகனங்களுக்கு எரிபொருள் வழங்கப்பட மாட்டாது எனவும் தெரிவித்தார். இதுவரை பதிவினை மேற்கொள்ளாத அனைத்து வாகன உரிமையாளர்களும் பதிவினை மேற் கொள்ளுமாறு கேட்டுக்கொண்டார். (20)

# முன்னைய இடத்தில் வியாபாரம் செய்ய மன்னார் சந்தை வியாபாரிகள் கோரிக்கை

(மன்னார்)

மன்னாரில் சந்தை வியாபாரத்தில் ஈடுபட்டிருந்த நூற்றுக்கு மேற்பட்ட சந்தை வியாபாரிகள் இணைந்து மன்னார் பிரதேச சபைக்கும்,உள்ளூராட்சி சபைக்கும் கோரிக்கையொன்றை விடுத்துள்ளனர்.

அக்கோரிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது;

நாம் முன்னர் வியாபாரம் நடத்திய இடத்திலேயே வியாபாரத்தை நடத்த அனுமதிக்குமாறும், தற்சமயம் ஒதுக்கப்பட்ட இடம் வியாபாரத்திற்கு ஏற்றதல்ல எனவும், தங்களது எதிர்கால வாழ்க்கையையும், துன்பங்களையும் கருத்திற்கொண்டு நிரந்தரமாகப் பழைய இடத்திலேயே சந்தை வியாபாரத்தை நடத்த ஏற்பாடு செய்யுமாறும் கேட்டுள்ளனர்.

தற்சமயம் பண்டிகைக் காலம் என்பதனால் மன்னார் பேருந்து நிலையத்திற்கு முன்பாகவும், வைத்தியசாலைச் சந்தியிலும் கோயிலுக்கு முன்பாகவும் தமது சந்தை வியாபாரத்தை மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (18)

# கரைச்சி பி.செ காணி அலுவலகத்தால் நடமாடும் சேவைக்கு ஏற்பாடு

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி கரைச்சிப் பிரதேச செயலகக் காணி அலுவலகத்தினால் நடமாடும் சேவை மூலம் காணி அனுமதிப்பத்திரம் அற்றவர்களுக்கு காணி அனுமதிப்பத்திரம் வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பெற்று வருகின்றன.

இதன் பிரகாரம் கரைச்சி பிரதேசசெயலக அக்கராயன் உப பணிமனையில் நாளை காலை 9.00 மணி முதல் பிற்பகல் 4.30 மணிவரையும், 28 ஆம் திகதி உருத்திரபுரம் சிவநகர் பொது மண்டபத்திலும், 30 ஆம் திகதி காலை 9.00 மணிமுதல் 12.30 மணி வரை கனகபுரம் கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்தில், 30 ஆம் திகதி பிற்பகல் 2.00 மணி முதல் 5.00 மணி வரை ஜெயந்திநகர் கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்தில், வைத்தும் அந்தந்தப் பகுதிகிராம காணி அனுமதிப்பத்திரமற்ற காணி உரிமையாளர்களுக்கு காணி அனுமதிப்பத்திரம் வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளதெனவும்., குறிப்பிட்ட தினங்களில் அந்தந்த கிராமத்தைச் சேர்ந்தவர்கள் உரிய ஆவணங்களுடன் குறிப்பிட்ட நிலையங்களுக்கு சமுகமளித்துத் தரும் வண்ணம் கிளிநொச்சி கரைச்சிப் பிரதேச செயலக காணி உத்தியோகத்தர் செ.ஸ்ரீரெங்கநாதன் கேட்டுக் கொண்டுள்ளார். (சோ)

# 'ஐஸ்' கட்டித் தொழிற்சாலை அமைத்துத்தர முல்லை.கடற்தொழிலாளர் கூ.ச கோரிக்கை

(முல்லைத்தீவு)

அதிக அளவில் இறால் பிடிபடுகின்றது ஆனால் (ஐஸ்) பனிக் கட்டி இல்லையென முல்லை மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசத்தலைவர் அ.மரியராசா முல்லை.மாவட்ட அரச அதிபருக்குத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்; யுத்தகாலத்திலும் சரி தற்போது யுத்தநிறுத்த காலத்திலும் சரி இங்குள்ள மீனவர்கள் பல நெருக்கடிகளைச் சந்தித்து வருகின்றார்கள். குறிப்பாக தென் பகுதிக்கு ஏற்றுமதி செய்யப்படும் மீன், இறால் போன்றவை பழுதுபடாமல் அனுப்பவேண்டுமானால் குளிரூட்டப்பட வேண்டும். அதற்கான பனிக்கட்டி இங்கு இல்லை. கொழும்பிலிருந்து எடுத்துவர வேண்டும். அவ்வாறு எடுத்துவருவதிலும் பல சிரமங்கள் தாமதங்கள் ஏற்படுகின்றன என்றும் பல தடவை எமக்காக ஒரு ஐஸ் தொழிற்சாலை அமைத்துத் தரும்படி மீனவர்கள் கோரிய போதும் இன்றுவரை எமக்கு அது கிடைக்கவில்லையென்று மீனவர்களின் நன்மை கருதி அதனைப் பெற்றுத்தரவேண்டும் என்று முல்லை.மாவட்ட அரச அதிபரைக் கேட்டுக்கொண்டார்.

அரச அதிபர் அதற்கான முன்மொழிவுகளைத் தருமாறும் தான் அதற்கான உதவியினை செய்தருவதாகவும் வாக்குறுதி வழங்கினார். (20)

# கிளி.மாவட்ட அரசியல்துறையின் சமகால அரசியல் கருத்தரங்குகள்

(அலுவலகச் செய்தியாளர்)

கிளிநொச்சி மாவட்ட அரசியல் துறையினாரால் பிரதேச ரீதியாக கிராமதரிசிப்பு கழ்வுகள் இடம் பெற்று வருவதுடன் கிராமம் கிராமமாக சமகால அரசியல் கருத்தரங்கு நடைபெற்றுவருகின்றன.

நேற்று பிற்பகல் 5.30 மணிக்கு கிளிநொச்சி சாந்தபுரம் பாடசாலை மண்டபத்தில் சமகால கருத்தரங்கு இடம்பெற்றது. கிளிநொச்சி பிரதேச அரசியல் துறைப்பொறுப்பாளர் போர்ப்பிரியன் தலைமையில் நடைபெற்ற மேற்படிகருத்தரங்கில் கிளிநொச்சிமாவட்ட அரசியல் துறைமகளிர் பொறுப்பாளர் பூவிழி கருத்துரைகளை வழங்கினார். பொதுமக்கள்,பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் மேற்படி கருத்தரங்கில் கலந்து கொண்டனர்.

கடந்த 21ஆம் திகதியன்று அக்கராயன் பிரதேச அரசியல் துறைப்பொறுப்பாளர் கரிகாலன் தலைமையில் கண்ணகைபுரம் மேற்கு முட்கொம்பன் கிராமத்தில் சமகால அரசியல் கருத்தரங்கும், பொதுக்கூட்டமும், விடுதலைப் போராட்டத்தினை சித்திரிக்கும் வீடியோ நிழற்பட கண்காட்சியும் இடம்பெற்றது.

அதேபோன்று கிளிமாட்ட அரசியல் துறைப் போராளிகளால் கடந்த 22ஆம் திகதியன்று பாரதிபுரம் பொது நோ்கரு மண்ட பத்திலும், 23ஆம் திகதி பகல் கிருஸ்ணபுரம் கிராமத்திலும் அன்றையதினம் பிற்பகல் உதயநகர் மேற்கு கிராமத்திலும் சமகாலக் கருத்தரங்குகள் நடாத் தப்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (சோ)

# தரம்-7 இல் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான புதியபாட அறிமுக செயலமர்வு

(வவுனியா)

கிளிநொச்சி மாவட்ட பாடசாலைகளின் தரம்-7 வகுப்புக்களில் சமூகக்கல்வி பாடம் கற்பிக்கவுள்ள ஆசிரியர்களுக்கான புதிய பாட அறிமுக செயலமர்வு நடைபெறவுள்ளது.

2005ஆம் ஆண்டில் தரம்-7 வகுப்புக்களில் சமூகக்கல்விப் பாடத்திற்குப் பதிலாக புவியியல், குடியுரிமை, வரலாறு ஆகிய பாட அறிமுக செயலமர்வு எதிர்வரும் 28,29,30 ஆம் திகதிகளில் கிளிநொச்சி வலயக்கல்வி அலுவலகக் கல்வி வள நிலையத்தில் நடைபெறவுள்ளது. இச் செயலமர்விற்கு சகல பாடசாலைகளிலும் 2005ஆம் ஆண்டில் தரம்-7இல் சமூகக்கல்விப் பாடம் கற்பிக்கவுள்ள ஆசிரியர்களை சமூகமளிக்குமாறு கேட்கப்பட்டுள்ளனர். (10)

# முஷாரப்பை கொலை செய்ய சதி செய்தார் இராணுவ வீரருக்கு மரண தண்டனை


(இஸ்லாமபாத்)

**கடந்த ஆண்டு டிசம்பரில் பாகிஸ்தான் சனாதிபதி முஷாரப்பைக் கொல்ல முயன்ற இராணுவ வீரருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.**

**இதே வழக்கில் மற்றொரு இராணுவ வீரருக்கு 10 ஆண்டுகள் சிறைத்தண்டணை விதிக்கப்பட்டது.**


இத்தகவலை பாகிஸ்தான் தொலைக்காட்சி வெளியிட்டது. முஷாரப்பைக் கொல்லும் முயற்சியில் 8 இராணுவ வீரர்கள் மீது வழக்குத் தொடரப்பட்டது. 6 வீரர்களின் மீதான வழக்கு தனியாக நடத்தப்படும் என்று அரசு அறிவித்துள்ளது.

இராணுவ நீதிமன்றத்தில் தீர்ப்பு வழங்கப்பட்டது என்று மட்டும் அரசின் செய்தித்தொடர்பாளர் கூறினார். எப்போதும் எங்கே தீர்ப்பு வழங்கப்பட்டது என்று கூறவில்லை. கடந்த ஆண்டு டிசம்பர் 14 இல் முஷாரப்பின் வாகனம் பால மொன்றைக் கடந்தபிறகு குண்டு வெடித்தது. இதில் பாலம் தகர்க்கப் பட்டது. அதே மாதம் 25ஆம் திகதி வெடிகுண்டுகள் நிரம்பிய வாகனத்தை முஷாரப்பின் வாகனத்தின் மீது மோத இருவர் முயன்றனர். இத் தாக்குதலில் பொலிசார் உட்பட 17 பேர் இறந்தனர்.



மேற்கு பாக்தாத்தில் நேற்று கிறிஸ்தவர்களின் நிகழ்வு ஒன்றின் போது நடத்தப்பட்ட குண்டு வெடிப்பில் சேதமடைந்த எரிபொருள் விநியோக கொள்கலனுக்கு முன்னால் நிற்கும் ஒருவரையும் காணலாம்.

## விமானத்தைச் சுமக்கும் பரசூட் அமெரிக்க நிறுவனம் பரீட்சிப்பு



நடுவானில் விமானங்கள் பறந்து கொண்டிருக்கும் போது திடீர் என்று கோளாறு ஏற்பட்டால் கீழே விழுந்து நொருங்கிப் பலரது உயிரைப் பழிவாங்கி விடுகிறது. இதைத் தடுக்க அமெரிக்காவின் ஒரு நிறுவனம் புதிய பரசூட் ஒன்றை உருவாக்கியுள்ளது.

மிக உயரத்தில் விமானத்தில் இருந்து பயணிகள் இந்த பரசூட்டை பயன்படுத்தி குதிக்க வேண்டியது இல்லை. கோளாறு ஏற்பட்டால் இந்தப் பரசூட் தானாக விரிந்து கொள்ளும். அந்த விமானமும் பரசூட்டில் தொங்கியபடி மெதுவாக கீழே இறங்க முடியும். இதன் மூலம் உயிர்ச்சேதம் ஏற்படுவதைத் தவிர்க்க முடியும். முதல் கட்டமாக குட்டி விமானங்களில் இதைப் பயன்படுத்தி தொடங்கி இருக்கிறார்கள்.

## காஷ்மீர் பிரச்சினையில் இந்தியா இறங்கி வந்தால் நாங்களும் விட்டுக் கொடுக்கத் தயார்- முஷாரப்

(புதுடில்லி)

காஷ்மீர் பிரச்சினையில் இந்தியா இறங்கி வந்தால் எங்களது நிலையிலிருந்து நாங்களும் இறங்கி வரத்தயாரா இருக்கிறோம் என்று பாகிஸ்தான் அதிபர் முஷாரப் கூறியுள்ளார். காஷ்மீர் பிரச்சினைக்கு ஐ.நா.தீர்மானத்தின் படி,தீர்வு காண பாகிஸ்தான் தயாராக உள்ளது. எனினும் இதில் இந்தியா இறங்கி வந்தால் எங்களது நிலைப்பாட்டிலிருந்து நாங்களும் இறங்கி வருவோம். 1948இல் நிறைவேற்றப்பட்ட ஐ.நா தீர்மானத்திலிருந்து பாகிஸ்தான் ஓர் அங்குலம் கூட விலகிச் செல்லவில்லை. காஷ்மீர் பிரச்சினைக்கு அங்கு வசிக்கும் மக்களின் மதிப்புக்கும் மரியாதைக்கும் குந்தகம் ஏற்படாத வகையில் அவர்கள் விருப்பப்படி தீர்வு காணப் படவேண்டும் என்பதுதான் பாகிஸ்தானின் நிலை.

பாகிஸ்தானில் நிலவும் அரசியல் குழப்ப நிலைக்குத் தீர்வு காண்பதற்கான முயற்சிகளை மேற்கொண்டு வருகிறேன். பாகிஸ்தானில் மாநில சட்டப்பேரவைகளும் நாடாளுமன்றமும் செயற்பட்டு வருவதை வைத்தே இங்கு சனநாயகம் தழைத்தோங்குகிறது என்பதை அறியலாம்.

எனது ஆட்சியில் தான் உண்மையான சனநாயகம் தழைத்தோங்குகிறது என்றார் முஷாரப்.

இந்தியா-பாக் வெளியுறவுச் செயலர்களுக்கு இடையேயான பேச்சுவார்த்தை டிச.27,28 இல் நடைபெறவிருக்கும் நிலையில் முஷாரப் இவ்வாறு கூறியுள்ளது முக்கியத்துவம் வாய்ந்தாகக் கருதப்படுகிறது.

## உடல்நலக் குறைவையும் பொருட்படுத்தாது போப் ஆண்டவர் கிறிஸ்மஸ் பிரார்த்தனை

(வத்திகான்)

உடல்நலக் குறைவையும் பொருட்படுத்தாமல் போப் ஆண்டவர் செயின் பீட்டர்ஸ் தேவாலயத்தில் நள்ளிரவு கிறிஸ்மஸ் பிரார்த்தனை நடத்தினார்.ஏசு கிறிஸ்து அவதரித்த தினமான கிறிஸ்மஸ் தினம் நேற்று உலகம் முழுவதும் கிறிஸ்தவர்களால் கோலாகலமாக கொண்டாடப்பட்டது.



கத்தோலிக்க கிறிஸ்தவர்களின் தலைமையிடமாக இத்தாலியில் உள்ள வத்தினன் நகரின் கிறிஸ்மஸ் பண்டிகையையொட்டி போப் ஆண்டவர் இரண்டாம் ஜான்பால் நேற்று முன்தினம் நள்ளிரவு பிரார்த்தனை நடத்தினார். செயின்ட் பீட்டர்ஸ் தேவாலயத்தில் இந்தச் சிறப்பு பிரார்த்தனைக் கூட்டம் நடைபெற்றது.

84 வயது போப் ஆண்டவர் ஏற்கனவே உடல் நலக்குறைவு காரணமாக அவதிப்பட்டு வருகிறார். அவர் சோர்வுடன் இருந்தார். ஆனால் அவற்றை பொருட்படுத்தாமல் சிறப்பு பிரார்த்தனைக் கூட்டத்தில் அவர் கலந்து கொண்டு உலகம் முழுவதும் உள்ள கிறிஸ்தவ மக்களுக்கு தனது வாழ்த்துச் செய்தியைத் தெரிவித்தார். அவர்களுக்கு ஆசியும் வழங்கினார்.



தாய்லாந்தில் யானைகளும் கிறிஸ்மஸ் பண்டிகையை உற்சாகமாகக் கொண்டாடின. அங்குள்ள அயுத்தயா நகரில் பள்ளிக்கூடம் ஒன்றில் நடந்த விழாவில் 2 யானைகள் கிறிஸ்மஸ்தாத்தா வேடம் அணிந்து கலை நிகழ்ச்சிகள் நடத்தின. மணி அடித்து அந்த யானைகள் நடனம் ஆடின. குழந்தைகளுக்கு பரிசுப் பொருள்களையும் வழங்கியது.

## கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடத்தில் குண்டு வெடிப்பு ஈராக்கில் ஒன்பது பேர்பலி; 14 பேர் படுகாயம்

(பாக்தாத்)

பாக்தாத்திலிருந்து அமெரிக் கப் பாதுகாப்புச்செயலர் டொனால்ட் றம்ஸ்பெல்ட் திரும்பிய சில மணித்தியாலயங்களின் பின் பாக்தாத்தில் எரிவாயு ரக்வண்டி குண்டுத்தாக்குதலில் 9 பேர் கொல்லப்பட்டதாகவும், 14 பேர் காயமடைந்தாகவும் பொலிசார் தெரிவிக்கின்றனர்.

இதில் இருவர் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற எரிவாயு ரக்வண்டித் தாக்குதலிற்கொல்லப்பட்டார். இச்சம்பவம் மன்சோர் மாவட்டத்தில் இடம் பெற்றது. இது மிக உயர் ஈராக் அரச அதிகாரிகள் வசிப்பிடம் எனவும் வெளிநாட்டு அமைப்புக்களின் அமைவிடம் எனவும் பொலிசார் தெரிவிக்கின்றனர். பொலிஸ்திணைக்களப் பேச்சாளர் றியட் அபாஸ் மேலும் 7 பேரின் இறந்த உடல்கள் நேற்று முன்தினத்தாக்குலில் சிதைவடைந்த கட்டடத்தின் கீழ் இருந்து நேற்று மீட்கப்பட்டதாகத்தெரிவித்துள்ளார். இது பற்றி நேரிற்கண்டவர் ஒருவர் தெரிவிக்கையில் ஒரு எரிவாயு ஏற்றிவந்த ரக்வண்டி வேகமாக மொன்சூர் மாவட்டத்தில் ஓட்டிச் செல்லப்பட்டு வெடிக்க வைக்கப் பட்டதாகவும், ஒரு வீடு அழிக்கப் பட்டதாகவும் அதில் ஒரு குடும்பத்தைச்சேர்ந்தவர்கள் முற்றாக அழிக்கப்பட்டுள்ளது எனவும் தெரிவித்தார். அமெரிக்கப் பாதுகாப்புச் செயலாளர் றொனால்ட் றம்ஸ்பெல்ட் ஈராக்கில் பலூஜா திக்கிரி போன்ற உயர்பாதுகாப்புப் பிரதேசத்திற்கு விஜயத்தை மேற்கொண்டதோடு மொன்சூரிற்கு விஜயத்தை மேற்கொள்வில்லை.

## ஜோர்ஜ்புஷ், ரம்ஸ்பீல்டுக்கு செல்வாக்கு சரிகிறது

அமெரிக்காவில் உள்ள 'வோஷிங்டன் போஸ்ட்' என்ற பத்திரிகை சார்பில் பொதுமக்களிடம் கருத்துக்கணிப்பு நடத்தப்பட்டது. பாதுகாப்பு அமைச்சர் ரம்ஸ்பீல்டு பதவியில் நீடிக்க வேண்டுமா என்ற கேள்விக்கு 58 சதவீதம் பேர் அவரைப் பதவியில் இருந்து நீக்க வேண்டும் என்றும், ஈராக் பிரச்சினையில் அவரது அணுகுமுறை சரியில்லை என்று கருத்து தெரிவித்துள்ளனர்.

ஆளும் குடியரசுக் கட்சி எம்.பி.க்கள் சிலரும் ரம்ஸ்பீல்டின் நடவடிக்கையை குறை கூறியுள்ளனர். ஆனால் ஜோர்ஜ் புஷ்சுக்கு ரம்ஸ்பீல்டு மீது அலாதிபிரியம். அவரை நீக்க வேண்டிய அவசியம் இல்லை என்கிறாார். கருத்துக்கணிப்பில் ஜோர்ஜ்புஷ்சின் செல்வாக்குப் பற்றிய கருத்துக்கணிப்பில் 51 சதவீதம் பேர் அவருக்கு எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர்.



நேற்று பாக்தாத்தில் லிபிய துாதரகத்துக்கு முன்னால் நிறுத்தப்பட்டிருந்த ட்ரக் வண்டி மீது நடத்தப்பட்ட குண்டுத் தாக்குலில் எரி காயங்களுக்குள்ளான 10 வயதுச் சிறுமி.

## இந்தோனேசியாவில் உலங்குவானூர்தி விபத்து இராணுவ அதிகாரிகள் உட்பட 14 பேர் பலி

(ஜகார்த்தா)

இந்தோனேசியாவில் இராணுவத்தினர் பயணம் செய்த உலங்குவானூர்தி ஒன்று விபத்துக்குள்ளானதில் 14 பேர் உடல் கருகிப் பலியாகினர்.

இந்தோனேசியாவில் ஜகார்த்தா நகரில் இருந்து ஒரு இராணுவ உலங்குவானூர்தி புறப்பட்டுச் சென்றது. ஜாவா நோக்கிச் சென்று கொண்டிருந்த அந்த உலங்கு வானூர்தியில் 14 பேர் இருந்தனர். திடீர் என்று அந்த உலங்கு வானூர்தி விழுந்து நொருங்கியது. நோருங்கி விழுந்த அந்த உலங்கு வானூர்தி தீப்பிடித்துக் கொண்டது.

இதில் 8 இராணுவ உயர் அதிகாரிகள் உட்பட 14 இராணு வத்தினர் பலியானார்கள். மோச மான வானிலை காரணமாகவே இந்த விபத்து நடந்ததாகத் தெரிய வந்துள்ளது. கடந்த 2 நாட்களுக்கு முன்பு கடற்படைக்குச் சொந்தமான விமானம் நொருங்கி விழுந்து 4 பேர் பலியானார்கள்.

# இனவாதத்தை விலக்கி சிங்கள அரசுகள் தமிழருக்கு உரிமை வழங்க முன்வருவது சந்தேகமே

**–நவம் அறிவுக்கூடப் பொறுப்பாளர் கலைக்கோன்**

(உடையார்கட்டு)

**இனவாதத் தளத்தை விலக்கி சிந்தித்து தமிழர்களுக்கு உரிமை வழங்கஆட்சிக்குவரும் சிங்களஅரசுகள் முன்வருவது சந்தேகத் திற்கிடமானதே என புதுக்குடியிருப்பில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்ற ஒன்று கூடலில் நவம் அறிவுக்கூடப் பொறுப்பாளர் கலைக்கோன் தெரிவித்தார்.**

அவர் மேலும் உரையாற்றுகையில்;இராஜதந்திர நகர்வுகளில் 2500 வருடகால பழமை அனுபவம் வாய்ந்த இலங்கை அரசு காலங்காலமாக வளர்த்த இனவாத அரசியலிலும் கைதேர்ந்ததே. சர்வதேசத்தைக் கொண்டு எமது போராட்டத்தை நசுக்க சிங்களஅரசு முனைப்புடனேயே செயற்படுகிறது. இதற்கு எடுத்துக் காட்டாகடோக்கியோ மாநாட்டைப் பயன்படுத்த சிங்கள அரசு எத்தனித்ததைக் கூறலாம். இன்று உலகின் சிந்தனையில் விடுதலைப் போராட்டங்களை நசுக்க, மழுங்கடிக்க ஒப்பந்தங்களைச் செய்ய முனைகின்றது எனத் தெரிகிறது. பின் காலம் கடத்தி போராட்டங்களைச் செயலிழக்கச் செய்விக்கின்றது. எடுத்துக் காட்டாக நலிவடையச் செய்யப்பட்ட பலஸ்தீனப் போராட்டத்தைக் கூறலாம். இனவாதத் தளத்தை விலக்கிச் சிங்கள அரசுகள் சிந்தித்து தமிழர்களுக்கு உரிமை வழங்க முன்வருமென்பது சந்தேகத்திற்கிடமானதே. ஏனெனில் பல தளங்களில் இனவாதம் மக்கள் மயப்படுத்தப்பட்டு, நிறுவனமயப் படுத்தப்பட்டு சிங்கள தேசத்தில் காணப்படுகிறது.

இப்போது அரசியல் நெருக்கடிகளை சிங்களஅரசு சந்தித்தாலும் அதையும் கடந்து சண்டையையே விரும்புகிறது. எமது தலைவர் அவர்களின் மாவீரர் தின உரைக்குத் தகுந்த பதிலைத் தர முடியாமல் தடுமாறும் சிங்களத் தலைமைகள் உருப்படியற்ற தீர்வைத்திணிக்க முயலும் அதேவேளை மிகப்பெரிய போருக்குத் தயாராவதையே காணக் கூடியதாக உள்ளது எனக் கலைக்கோன் கூறினார். (19)

-மல்லாவி வைத்தியசாலையிலிருந்து-

# இடமாற்றம் பெறும் பணியாளருக்கு சேவை நலன் பாராட்டு விழா

(மல்லாவி)

மல்லாவி வைத்தியசாலை அபிவிருத்திச் சபையும், வைத்தியசாலை ஊழியர் நலன் புரிச் சங்கமும் இணைந்து மல்லாவி வைத்தியசாலையில் சேவையாற்றி ஓய்வில் சென்ற பணியாளர்களையும், இடம் மாற்றம்பெற்ற பணியாளர்களையும் கௌரவிக்கும் முகமாகசேவை நலன்பாராட்டு விழாவும், பிரியாவிடை நிகழ்வும் வைத்தியசாலைப் பொறுப்பதிகாரி டாக்டர் திருமதி ப. ஏகாம்பர மூர்த்தி அவர்களின் தலைமையில் வெளிநோயாளர் பிரிவில் கடந்த ஞாயிற்றுக் கிழமை நடைபெற்றது.

இந்நிகழ்விற்கு சிறப்பு விருந்தினர்களாக முல்லை மாவட்ட அரசியல்துறைதுணைப் பொறுப்பாளர் சின்னண்ணன், மற்றும் துணுக்காய்ப் பிரதேச செயலாளர் நா. நந்தகுமார், மல்லாவி சுகாதார வைத்தியஅதிகாரி, பணிமனை பொது சுகாதாரபரிசோதகர் செ.அரவிந்தன், துணுக்காய்ப் பகுதிபிரதேசப் பொறுப்பாளர் புனிதன், அனிஞ்சியன்குளம் கிராம அலுவலர் பி.அசோகன், முல்லை மாவட்ட தேசியஎழுச்சிப் பேரவைப் பொறுப்பாளர், மல்லாவி வர்த்தகசங்கத்தலைவர் தி.தர்மலிங்கம் செயலாளர் ந.தனராஜ் ஆகியோர்கலந்து சிறப்பித்தனர்.

இந்நிகழ்வில் பணியாட்களைப் பாராட்டி சிறப்புரை ஆற்றிய முல்லை மாவட்ட அரசியல் துறைத் துணைப்பொறுப்பாளர் தமது உரையில் கடந்தகால போராட்டச்சூழலில் எமது மக்கள் இடம் பெயர்ந்து பல இன்னல்களையும் துன்ப துயரங்களையும் அனுபவித்து வந்தனர். அவ்வேளையும், இவ் வைத்தியசாலை எமது மக்களுக்கு ஆற்றிய சேவை என்றும் போற்றற்குரியது, புனிதமானது.

பணியாட்கள் மிகவும் சிரமப்பட்டு நோயாளர்களுக்கு சிறந்த முறையில் சிகிச்சை வழங்கப் போராடினார்கள். தொடர்ந்தும் இவ்வைத்தியசாலை இப்பிரதேச மக்களுக்கு சிறந்த முறையில் பணியாற்ற இங்குள்ள வெற்றிடங்களை நிரப்பமுயற்சி எடுத்து வருகிறோம் என்று கூறினார்.

தொடர்ந்து உரையாற்றிய துணுக்காய்ப் பிரதேசசெயலாளர் நா. நந்தகுமார் தமது உரையில் இங்கு இடம்மாற்றம் பெற்றுச் செல்லும் பணியாட்களின் கஷ்டங்களையும், அவர்கள் மனம் தளராதுஉறுதியாய் நோயாளர்களை அன்புடன் அரவணைத்துப பழகியதையும் நேரில்கண்டுள்ளேன். போர்க்கால சூழலில் பல வசதியீனங்கள் மத்தியில் இவர்கள் கடமையாற்றித் தமது சேவையைச் சிறப்பாக ஆற்றியவர்கள் என்றும் இங்கிருந்து பணியாற்றி இடமாற்றம் பெறுகிறார்கள். இதனால் இவர்களின் இடத்திற்குப் பணியாளர்களை நியமிக்கவும் இவ் வைத்தியசாலையின் தேவையை நிறைவேற்றி தரம் உயர்த்தி பிரதேச மக்களுக்கு உரிய முறையில் சிகிச்சை அளிக்கச் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் கதைத்துள்ளேன் என்று கூறினார்.

மற்றும் பலரும் உரையாற்றினர். இறுதியாக வைத்தியசாலை அபிவிருத்திச்சபையின் செயலாளர் சி. சண்முகநாதனின் நன்றியுரையுடன் நிறைவுபெற்றது.

# புனரமைப்புச் செய்யப்பட்ட பூநகரி வைத்தியசாலை திறப்பு

(பூநகரி)

வலம்புரி இராணுவ நடவடிக்கையால் முற்றாக அழிக்கப்பட்ட பூநகரி வைத்தியசாலையின் வெளி நோயாளர் பிரிவு கட்டடத்திறப்பு விழா நேற்று முன்தினம் நடைபெற்றது. காலை 10 மணிக்கு பூநகரி வைத்திய அதிகாரி சுதர்சன் தலைமையில் ஆரம்பமான நிகழ்வில் மங்கல விளக்கேற்றலைத் தொடர்ந்து 'பொதுச்சுடரை பூநகரி கடற்புலிகள்



அரசியல்துறைப்பொறுப்பாளர் ஏற்றியதுடன் தேசியக் கொடியையும் ஏற்றி வைத்தார். அதனைத் தொடர்ந்து பெயர்ப்பலகையை அரசஅதிபர் தி.இராசநாயகம் திரைநீக்கம் செய்ததுடன் பிரதான மண்டபத்தையும் நாடாவைவெட்டித்திறந்து வைத்தார் வைத்திய அதிகாரியின் அறையைப் பூநகரிப் பிரதேச செயலர் மா.சிறீஸ்கந்தகுமார் நாடாவை வெட்டித் திறந்து வைக்க, ஓய்வுபெற்ற அதிபர்சி.வையிரநாதர் முதலாவதாக வைத்திய அதிகாரியால் பார்வையிடப்பட்டார். தொடர்ந்து மகப்பேற்று விடுதியை கிராமசேவகர் கோ.அரியரத்தினமும், மருந்து கட்டுமிடத்தை பதிவாளர் திருமதி கு.தில்லை நாயகியும், நிர்வாக அறையைப் வைத்தியர் முருகானந்தமும், மருந்து அறையை பூநகரி புனர்வாழ்வுக்கழகத் தலைவர் இ.பஞ்சாட்சரமும் நாடாவை வெட்டித்திறந்து வைத்தனர்.

அதனைத் தொடர்ந்து அகவணக்கம் இடம் பெற்றது வைத்திய அதிகாரி சுதர்சனின் தலைமையுரையைத் தொடர்ந்து பூநகரி பங்குத்தந்தை லியோ ஆம்ஸ்ரோங்கின் ஆசியுரை இடம்பெற்றது. அடுத்ததாக பூநகரி ப.நோ.கூ.சங்கத் தலைவர் ந.பாலசுப் பிரமணியத்தின் வரவேற்புரையைத் தொடர்ந்து சிறப்புரைகளைப் பிரதி மாகாண சுகாதாரப்பணிப்பாளர் சத்தியமூர்த்தி, பூநகரிப் பிரதேச செயலர், பூநகரிப் பலநோக்குக் கூட்டுறவுச்சங்க உபதலைவர் தவராசசிங்கம், பூநகரி பங்குத்தந்தை ஆகியோர் ஆற்றினர். தொடர்ந்து பிரதம விருந்தினரான அரச அதிபர் உரைநிகழ்த்தினார். "நீர்ப்" அமைப்பின் நிதியுதவியில் 6 மில்லியன் ரூபா செலவில் இவ்வைத்தியசாலை புனரமைப்புச் செய்யப்பட்டுள்ளது. (34)





# துணுக்காய் பிரதேசத்தில் காவல்துறை இரவுச் சுற்றுக்காவல்

துணுக்காய் பிரதேசத்தில் காவல்துறையினர் இரவு சுற்றுக்காவல் கடமைகள் புரிந்து வருகின்றனர். இதன் போது இரவு வேளைகளில் வெளிச்சமின்றி வரும் வாகனங்களுக்கு அந்த இடத்தில்வைத்து குற்றப் பணம் அறவிட்டு வருகின்றனர் அதன்போது இலக்கத் தகடு இன்றி வரும் வாகனங்களுக்கும் குற்றப்பணம் அறவிட்டு வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (24)

-காவல்துறை அலுவலரை-

# கடமை புரியவிடாது தடுத்த மூவருக்கு நீதிமன்று தண்டனை

துணுக்காய் காவல் பணிமனையில் கடமை புரிந்த காவல்துறை பொது அலுவலரை கடமை செய்ய முடியாமல் தடுத்த மதுபோதையில் வந்த நபரை காவல் துறையினர் கடந்த 22ஆம் திகதி மல்லாவி மாவட்ட நீதிமன்றில் முற்படுத்தினர். தென்னியங்குளம் பகுதியைச் சேர்ந்த குறித்த நபர் குற்றவாளியாக காணப்பட்டார். மல்லாவி மாவட்ட நீதிமன்ற நீதியாளரான இளங்கதிர் அவர்கள் குற்றவாளிக்கு 1500 ரூபாய் அபராதமும் 3 மாதசிறைத்தண்டனையும் வழங்கினார். (24)

# யாழ்ப்பாணம் கல்வியியல் கல்லூரி; உள்ளகப் பயிற்சி பெறுவோர் கவனத்திற்கு

(அலுவலக செய்தியாளர்)

யாழ்ப்பாணம் கல்வியியற் கல்லூரி உள்ளகப் பயிற்சியை மேற்கொள்ளும் கீழே பெயர் குறிப்பிடப்படுபவர்களும் அவர்கள் பயிற்சியை மேற்கொள்ளவுள்ள பாடசாலை அதிபர்களும் 31.12.2004 ஆம் திகதி காலை 9.00 மணிக்கு கிளிநொச்சி வலயக் கல்விப் பணிமனைக்கு சமுகமளிக்குமாறு வலயக்கல்விப்பணிப்பாளர் ப.அரியரத்தினம் வேண்டுகைவிடுத்துள்ளார்.

ப.சசிரதன் கிளி.மத்தியகல்லூரி, ப.அபிராமி கிளி. பாரதிவித்தியாலயம், க.பிரபாகரன் கிளி.புதுமுறிப்பு விக்கினேஸ்வரா வித்தி, து.இந்திராணி கிளி.சிவபாதகலையகம்,க.உசாந்தினி கிளி. இந்து ஆரம்பவித்தியாலயம், இ.கோமளா கிளி.கனகபுரம் ம.வி,

அ.சுஜாதா கிளி.பரந்தன் இ.ம.வி, பா.ரமணாகரன் கிளி. இந்துக்கல்லூரி ஜீ.சோபினா கிளி.முருகானந்தா ம.வி, த.தவரூபி கிளி.மத்திய கல்லூரி. (சோ)

# ஓமந்தை ஊடாகப் பயணிப்போர் மீது பதிவு என்ற பெயரில் கெடுபிடி

கடந்த மாதம் 27 ஆம் திகதிக்குப் பின்னர் வவுனியாவில் இருந்து ஓமந்தையின் ஊடாக வன்னிப்பகுதியை நோக்கிப் போகின்ற பிரயாணிகள் மீது இராணுவத்தினர் கெடுபிடியாக நடந்து கொள்வதாக மக்கள் தெரிவிக்கின்றனர். நேற்று முன்தினம் காலை வவுனியாவில் இருந்து வன்னிப் பகுதியை நோக்கிச் சென்ற பலநூற்றுக் கணக்கான பிரயாணிகளை அதிகநேரம் பதிவுகள் என்ற போர்வையில் தாமதப் படுத்தியுள்ளனர். மழை பெய்யும் சமயத்திலும் பிரயாணிகள் விரைவாகப் போவதற்கு அனுமதிக்க இராணுவத்தினர் தவறியிருப்பதாகவும் அந்தமக்கள்தெரிவிக்கின்றனர்.

இதன் காரணத்தினால் பெருநாளுக்காக வன்னி மற்றும் யாழ்ப்பாணம் நோக்கிச் சென்ற பிரயாணிகள் பெரும் சிரமத்திற்கு முகம் கொடுத்தனர். (21)

-பூநகரி-மன்னார் வீதியில்-

# 30 ஆம் மைல் பாலம் உடைந்ததால் போக்குவரத்துத் துண்டிப்பு

பூநகரி மன்னார் வீதியில் 30 ஆம் மைலில்உள்ள பாலம் நேற்று முன்தினம் உடைந்ததால் மன்னாருக்கான போக்குவரத்து துண்டிக்கப்பட்டுள்ளது. இதனையடுத்து பாலம் திருத்துவதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன. இவ் வீதியில் பூநகரியில் இருந்து ஈனச்சி முடக்கு,நாலாவெளி திக்குவில், பல்லவராயன்கட்டு, உப்புவில் என்ற இடங்கள் சேறும் சகதியுமாகக் காணப்படுகின்றன. அத்துடன் மண்டக்கல்லாறு நீர் பாய்ந்து கல் கிளப்பப்பட்டுவீதி பழுதடைந்துள்ளது அத்துடன் செம்பன்குன்று வீதியில் 1 அடி நீர் எந்நேரமும் நிற்கின்றது. இதனால் மக்கள் பலசிரமங்களை எதிர்நோக்குகின்றனர். (34)

# வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு தமிழர் புனர்வாழ்வுக்கழகம் நிவாரண உதவி

(யாழ்ப்பாணம்)

யாழ். கொழும்புத்துறைப் பகுதியில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கான உலருணவு நிவாரண உதவிகளைத் தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தினர் வழங்கியுள்ளனர்.

அந்த வகையில் அண்மையில் அண்மைக் காலமாகப் பெய்த மழையால் ஏற்பட்ட வெள்ளத்தால் பாதிப்புற்ற கொழும்புத்துறைப் பகுதிகளைச் சேர்ந்த 75 குடும்பங்களுக்கு அரிசி, மா, சீனி, பருப்பு,மண்ணெண்ணெய்போன்ற வற்றை தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினர் வழங்கியுள்ளனர்.

இதேவேளை யாழ். குடாநாடெங்கிலும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிவாரண உதவிகளைத் தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தினர் மேற்கொண்டு வருகின்றனர். (33)



இலங்கை சட்டத்தரணிகள் சங்க செயலகம் முன் நேற்று முன்தினம் மறியலில் ஈடுபட்டிருக்கும் அன்னையர் முன்னணியினர். (27)

# யாழ்.மாவட்டத்தில் சனவரி மாதம் முதல் சமுர்த்தி நிவாரணத் திட்டம் அமுலாகும்

### -அரச வட்டாரங்கள் தகவல்

யாழ். மாவட்டத்தில் சனவரி மாதம் முதல் சமுர்த்தி நிவாரணத்திட்டம் தொடர்பான செயற்பாடுகள் அமுலுக்கு வர இருப்பதாக அரச வட்டாரங்களில் இருந்து தெரிவிக்கப்படுகிறது. வறுமைக்கோட்டுக்கு உட்பட்ட மக்களின் வாழ்க்கைத்தரத்தைக்கருத்தில் கொண்டே இத்திட்டம் சனவரி மாதம் முதல் அமுற்படுத்தப்பட இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. இத்திட்டத்திற்குரிய விண்ணப்பப் படிவங்கள் யாழ். மாவட்டத்தில் உள்ள அனைத்துப் பிரதேசசெயலகங்களுக்கும் அனுப்பப்பட்டுள்ளதாகவும். சனவரி மாதம் முதல் வாரம் மட்டில் விநியோகம் செய்யப்பட்டு அதன் பின்னரே கொடுக்கப்பட உள்ள நிவாரணம் குறித்துத் தெரிவிக்கப்படுமெனத் தெரியவருகிறது. (28)

# தாய் சேய் நலத்திட்டம்

(யாழ்ப்பாணம்)

“போரூட்” சர்வதேச தொண்டர் அமைப்பினால் யாழ். குடாநாட்டில் உள்ள பின்தங்கிய பிரதேசங்களில் வாழும் குடும்பப் பெண்களின் மேம்பாட்டினைக் கருத்தில் கொண்டு தாய்சேய் நலத்திட்டம் ஒன்று நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின் கீழ் குழந்தைகளைப் பராமரித்தல், அவர்களுக்குரிய கல்வி வழிகாட்டல்களை வழங்கல், குடும்ப முகாமைத்துவம் போன்ற பல்வேறு நடவடிக்கைகள் குறித்த ஆற்றல் மேம்பாட்டுப் பயிற்சிகள் குடும்பப் பெண்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றன. இதைவிட குழந்தை பராமரிப்புத் தொடர்பான கருத்தரங்குகளையும் போரூட் அமைப்பு நடத்தி வருகிறது. (33)

# சனசமூக நிலையம், பாலர்பாடசாலையை புனரமைக்க மக்கள் கோரிக்கை

கடந்தகால போர் நடவடிக்கையால் சிதைந்து போயுள்ள சங்கத்தானை சரதா சனசமூக நிலையம் மற்றும் அதனுடன் இணைந்து இயங்கிய இளங்கோ பாலர் பாடசாலை போன்றவற்றைச் சீராகப் புனரமைத்து இயங்க வைக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என இப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். 2000ஆம் ஆண்டு இடம்பெற்ற கொடிய யுத்தத்தால் பாதிக்கப்பட்ட இப்பாடசாலைக்கும் சனசமூக நிலையத்திற்கும் ரூபா 50 ஆயிரம் நிதி ஒதுக்கப்பட்டும், அரைகுறை வேலைகளுடன் முற்றுப்பெறாத நிலையில் உள்ள இந்நிலையங்களைப் புனரமைப்பதற்கும், பாடசாலை மாணவர்க்கு தளபாடங்களைக் கொள்வனவுசெய்வதற்கும், நிதிஒதுக்கீடு செய்வதற்கும். உடனடி நடவடிக்கை எடுக்கும்படி சம்பந்தப்பட்ட தரப்புக்களை மக்கள் கோரியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.(28)

# யாழ்.மாற்றலாகிச் செல்லும் வவு. அரச அதிபருக்குப் பிரியாவிடை

வவுனியா மாவட்ட ஊடகவியலாளர்களால் வவுனியா அரச அதிபர் க.கணேஷ் அவர்களுக்கு பிரியாவிடை அளிக்கப்பட்டுள்ளது.

வவுனியா மாவட்ட அரச அதிபராக 21.02.1995 முதல் கடமையாற்றி 31.12.2004 அன்றுடன் யாழ்ப்பாண மாவட்டத்திற்கு இடம் மாற்றம்பெற்றுச்செல்லும் அரசஅதிபர் க.கணேஷ் வவுனியா மாவட்டத்தில் யுத்த காலங்களிலும், சமாதான காலங்களிலும் ஆற்றிய அளப்பரிய சேவையைப் பாராட்டி வவுனியா மாவட்ட ஊடகவியலாளர்களால் பாராட்டு வைபவம் நேற்று றோயல் கார்டனில் நடத்தப்பட்டுள்ளது. (10)

### — உலக வங்கியின் நிதி உதவியில் —

# செட்டிகுளம் பிரதேசத்தில் அமைக்கப்பட்ட வீடமைப்புத் திட்ட திறப்பு விழா

(வவுனியா செய்தியாளர்)

உலக வங்கியின் நிதி உதவியில் செட்டிகுளம் பிரதேசத்தில் புதிதாக அமைக்கப்பட்ட வீடமைப்புத் திட்டங்களின் திறப்பு விழா எதிர்வரும் வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது.

செட்டிகுளம் பிரதேச செயலர் செல்வி. சுகந்தி துரைச்சாமி தலைமையில் நடைபெறவுள்ள இவ் வீடமைப்புத் திட்டங்களின் திறப்பு விழா நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான செல்வம்அடைக்கலநாதன், சிவசக்தி, ஆனந்தன், சிவநாதன் கிஷோர் ஆகியோரும் விடுதலைப்புலிகளின் வவுனியா மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் ஞானவேல் அவர்களும் கௌரவ விருந்தினராக வவுனியா அரச அதிபர் க.கணேஷ் அவர்களும் கலந்து கொள்ளவுள்ளனர்.

அன்றைய தினம் காலை 10.00 மணிக்கு மெனிக்பாம் வீடமைப்புத் திட்டமும் பிற்பகல் 1.00மணிக்கு கிறிஸ்தவகுளம் வீடமைப்புத் திட்டமும் திறந்து வைக்கப்படவுள்ளன. (10

# முல்லை.மாவட்ட சிறந்த விவசாயிகளுக்கு பரிசில்கள் வழங்கிக் கௌரவிப்பு

உலக விவசாயதினத்தினை முன்னிட்டு முல்லை.மாவட்டத்தில் சிறந்த விவசாயிகள் கௌரவிப்பு கடந்த வியாழக்கிழமை ஒட்டுசுட்டான் மத்திய கமநல அபிவிருத்தித் திணைக்களத்தில் நடைபெற்றது. முல்லை.மாவட்ட உதவி விவசாயப்பணிப்பாளர் இ.கோகுலதாசன் தலைமையில் முற்பகல் 11.00 மணிக்கு ஆரம்பமான இந் நிகழ்வில் பொது ஈகச்சுடரினை ஒட்டுசுட்டான் பிரதேச அரசியல் துறைப் பொறுப்பாளர் ஈழவன் ஏற்றினார்.

தமிழீழத்தேசியக் கொடியினை முல்லை.மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் செ.முகுந்தன் ஏற்றினார். மங்கல விளக்கினை வன்னிப் பாராளுமன்ற உறுப்பினர் ச.கனகரத்தினம், முல்லை.மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி இமெல்டா- சுகுமார், முல்லை. மாவட்டதமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனப் பொறுப்பாளர் பூங்குன்றன், விவசாயிகள் சார்பாக இராசையா, துணுக்காய்ப்பிரதேச கால்நடை வைத்தியர் ஆகியோர் ஏற்றினார்கள். வரவேற்புரையினை ஒட்டுசுட்டான் பிரதேச த.பொ.மே.நிறுவன இணைப்பாளர் தயா வழங்கினார். வரவேற்பு நடனத்தினை ப.கஜனி வழங்கினார். தலைமையுரையினைத் தொடர்ந்து கருத்துரைகளை முல்லை.மாவட்ட த.பொ.மே.நிறுவனப் பொறுப்பாளர் பூங்குன்றன் முல்லை. மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் செ.முகுந்தன். ஆகியோர் வழங்கினார்கள்.

சிறப்புக்கருத்துரைகளை வன்னிப்பாராளுமன்ற உறுப்பினர் ச.கனகரத்தினம், முல்லை. மாவட்ட அரசஅதிபர் திருமதி. இமெல்டா- சுகுமார், தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனப் பொறுப்பாளர் க.கரிகாலன் ஆகியோர் வழங்கினார் கள்.

தொடர்ந்து 57 சிறந்த விவசாயிகள் சான்றிதழ்களும், பரிசில்களும் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர். சிறந்த நெல் உற்பத்தியாளர்கள், சிறந்த மானாவாரி நெற்செய்கையாளர்கள், சிறந்த சேதனப்பசளையுடனான மானாவாரி நெற்செய்கையாளர், சிறந்த நீர்ப்பாசன நெற்செய்கையாளர், சிறந்த மேட்டுப்பயிர் உற்பத்தியாளர், சிறந்தபழப்பயிர்ச் செய்கையாளர், சிறந்த மரக்கறிச் செய்கையாளர், சிறந்த வெங்காயச்செய்கையாளர், சிறந்த மிளகாய்ச்செய்கையாளர், சிறந்த நீர் முகாமைத்துவச் செய்கையாளர், சிறந்த நடுகைப்பொருள் உற்பத்தியாளர் என்ற வகையில் தெரிவு செய்யப்பட்டே கௌரவிக்கப்பட்டனர்.

இவர்களுக்கான சான்றிதழ்கள், பரிசில்களை முல்லை. மாவட்ட அரசஅதிபர், வன்னிப் பாராளுமன்ற உறுப்பினர், தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனப் பொறுப்பாளர், முல்லை. மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர், முல்லை.மாவட்ட த.பொ.மே. நிறுவனப் பொறுப்பாளர், விவசாயத்திணைக்கள உதவி ஆணையாளர், விவசாயப் போதனாசிரியர்கள் என வருகைதந்திருந்த அனைத்து முக்கிய பிரமுகர்களாலும் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.

இந்த நிகழ்வில் பெருமளவானவிவசாயிகள், அரச திணைக்களப்பிரதிநிதிகள், அரசசார்பற்ற நிறுவனப் பிரதிநிதிகள், த.பொ.மே.நிறுவனப் பிரதிநிதிகள், அரசியல்துறையினர் எனப் பலர் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (20)

### — அமைச்சர் அநுராவிடம் —

# கொழும்பு கலைநிகழ்ச்சி தொடர்பாக கேள்வி எழுப்புகிறது ஜாதிக ஹெலஉறுமய

கொழும்பு குதிரைப் பந்தயத்திடலில் இடம்பெற்ற பொலிவூட் கலைஞர்களின் இசை நிகழ்ச்சிக்கு உல்லாசப் பயணத்துறை அமைச்சின் அனுமதி பெறப்பட்டதா? என ஜாதிக ஹெல உறுமய பாராளுமன்ற உறுப்பினர் ஓமல்பே சோபிததேரர் அமைச்சர் அநுரா பண்டார நாயக்க விடம் கேள்வி எழுப்பியுள்ளார்.

அவ்வாறு அனுமதிபெறப்படாவிடின் நிகழ்ச்சியை நடத்த அனுமதி வழங்கப்பட்டது எவ்வாறு? டிசம்பர் 11 ஆம் திகதி நடைபெற்ற நிகழ்வில் கலந்து கொண்ட கலைஞர்கள் வெளிநாட்டவர்கள் என்பதால் உல்லாசப் பயணத்துறை அமைச்சின் அனுமதியைப் பெற வேண்டும்.

மேற்குறிப்பிட்ட நிகழ்ச்சிக்கு உல்லாசப் பயணத்துறையின் அனுசரணை வழங்கப்பட்டதா? அவ்வாறாயின் அதனை ஏற்பாடு செய்ய எந்த நிறுவனத்திற்கு அனுசரணை வழங்கப்பட்டது? அதில் சம்பந்தப்பட்ட அமைச்சின் அதிகாரிகள் யார்? இந்தியக் கலைஞர்களுக்கு நிகழ்ச்சிக்காகச் செலுத்தப்பட்ட பணத்தொகை எவ்வளவு? இதற்காக உல்லாசப் பயணத்துறை அல்லது அரசின் வேறேதாவது நிறுவனம் செலவழித்த பணம் எவ்வளவு? ஏற்பாட்டாளர்களால் இறைவரித் திணைக்களத்திற்குச் செலுத்தப்பட்ட பணம் எவ்வளவு? என்பன போன்ற கேள்விகள் எழுப்பப்பட்டன.

இந்த நிகழ்ச்சிக்கு ஜாதிக ஹெல உறுமய கடும் எதிர்ப்புத் தெரிவித்தமை தெரிந்ததே. இந்த நிகழ்வில் உல்லாசப் பயணத்துறைப் பிரதி அமைச்சர் அர்ஜுன ரணதுங்க கலந்துகொண்டிருந்தார். இவர் தேசப்பற்றாளர் முன்னணியில் அங்கம் வகிப்பது குறிப்பிடத்தக்கது.

# சர்வதேச பறப்புக்களில் ஈடுபட தனியார் நிறுவனங்களுக்கு அனுமதி

சிறிலங்காவில் உள்நாட்டு விமான நிலையங்களுக்கு இடையில் சேவைகளை மேற்கொண்டு வரும் மூன்று நிறுவனங்கள் தமது சேவையை சர்வதேச அளவில் மேற்கொள்ள சிறிலங்கா அரசு அங்கீகாரம் வழங்கியுள்ளது.

தற்போது உள்நாட்டில் பயணிகள் விமான சேவைகளை மேற்கொண்டுவரும் லயன் எயார், எக்ஸ்போ ஏவியேசன், செரன்டிப் எக்ஸ்பிரஸ் ஆகிய நிறுவனங்களே இந்த வாய்ப்பைப் பெற்றுள்ளன. இந்தியாவின் வர்த்தக மையங்களுக்கு தமது சேவையை முதலில் விஸ்தரிப்பதன் ஊடாக சர்வதேச பறப்புக்களுக்குள் தமது நிறுவனம் காலடி எடுத்துவைக்கப்போவதாக எக்ஸ்போ ஏவியேசன் நிறுவன அதிகாரி தெரிவித்துள்ளார். லயன் எயார் நிறுவனமும் இந்தியாவுக்கு முதலில் தனது சேவையை விஸ்தரிக்கவுள்ளதாகக் கூறியுள்ளது ஐரோப்பிய நாடுகளுக்கான பறப்புக்களைத் தாம் மேற்கொள்ள விரும்புவதாக செரன்டிப் எக்ஸ்பிரஸ் நிறுவன அதிகாரி ஒருவர் கூறியுள்ளார். உள்நாட்டில் சேவைகளை மேற்கொள்ளும் இந்த விமான நிறுவனங்கள் சர்வதேச பறப்புக்களை மேற்கொள்ளும் போது பயணிகள் தாம் சென்று சேரவேண்டிய இடங்களுக்கு இணைப்பு விமான சேவை மூலம் இலகுவில் சென்றடையலாம் என்றும் அதேவேளை பயணக் கட்டணமும் குறைய வாய்ப்பு உண்டு என்றும் விமான சேவை அதிகாரிகள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

# ஆன்மீக வாதியின் கைதில் தொடங்கி அரசியல் கைதில் முடிக்க தமிழகப் பொலிசார் திட்டம்?

அ.கலைவாணி

தமிழகத்தில் பிரபல தாதா அப்புவை தமிழக அரசுகைது செய்துள்ளதையடுத்து மிகப்பெரிய பரபரப்பு ஏற்பட்டுள்ளது. அப்புவின் கைதானது அரசியலில் தமிழக எதிர்க்கட்சியைச் சேர்ந்த பல தலைவர்களுக்குக் கிலியை ஏற்படுத்தியுள்ளதாக நம்பப்படுகின்றது.

அந்த வகையில் அப்புவைக் கைது செய்ததே தமிழக எதிர்க்கட்சியினரை இலக்கு வைத்துத்தான் என்றும் அதிலும் குறிப்பாக தி.மு.க. மீதான குறியே என்றும் கூட தகவல்கள் கசிந்தவண்ணமுள்ளன.

எவ்வாறெனில் பிரபல தாதாவான அப்புவுக்கும் தி.மு.க. ஸ்டாலினுக்குமிடையே மிக நெருக்கமான உறவுகள் நிலவியதாகவும், ஸ்டாலினைக் குறிவைத்தே தமிழக ஆளும் கட்சி காய்களை நகர்த்தி வருவதாகவும் கூட ஆருடம் கூறப்படுகின்றது. அந்த வகையில் பார்க்கும் போது அப்புவின் கைதானது சங்கராச்சாரியாருக்கு எதிராகத் திரும்பும் அதே வேளை தமிழக எதிர்க்கட்சியினருக்கு எதிராகத்திருப்பப்படும் என்றுதான் உறுதியாகக்



சங்கராச்சாரியார்

கருதப்படுகின்றது.

சங்கராச்சாரியாரை சங்கரராமன் கொலையுடன் தொடர்புடையதாகக் கூறியே தமிழகப் பொலிசார் கைது செய்தனர். சங்கரராமனை அப்புவின் கும்பலே சங்கராச்சாரியாரின் பணத்திற்காகக் கொலை செய்ததாகவும் கூறி அப்புவுக்கு வலை விரித்தனர் தமிழகப் பொலிசார்.

ஆனால் அப்புவைக் கைது செய்திருப்பது சங்கராச்சாரியாருக்கு எதிராகத்தான் என்றாலும், அப்புவை தமிழகப்பொலிசார் வளைத்திருப்பது எதிர்க்கட்சியினரைக் கட்டிப்போடத்தான் என்றுதான் மேலும் புகைகின்றது.

அந்தவகையில் தமிழகப் பொலிசார் அப்புவின் மீது சுமத்தியுள்ள குற்றச்சாட்டுக்கள் மூன்று.

* சங்கரராமன் கொலை.
* அண்ணா நகரைச் சேர்ந்த ரமேஷ் குடும்பத்தினது தற்கொலை.
* காஞ்சிமட அர்ச்சகரது கொலை.

போன்ற கொலைகளுக்குப் பின்னால் அப்பு இருந்ததாக உறுதியாகத் தமிழகப் பொலிசார் கூறுகின்றனர்.

இதில் சங்கரராமன் கொலைக்குப் பின்னால் அப்பு இருந்தமைக்கான காரணங்களை எடுத்துவரும் தமிழகப் பொலிசார் அண்ணா நகர் ரமேஷ் கொலையையும் மிகவும் இரகசி யமாகத் துருவி வருகின்றனர் என்பது புதிய தகவல்.

ஏன் அண்ணா நகர் ரமேஷ் கொலையை தமிழகப் பொலிசார் துருவுகின்றனர் என்றால் அங்கேதான் திகில் நிறைந்த விடயமே இருக்கின்றது.


அதாவது ரமேஷ் கொலைக்கு அப்புதான் காரணம் என்றாலும் அப்புவைத் தூண்டிவிட்டது தி.மு.க. ஸ்டாலின்தான் என்பது பரபரப்பு நிறைந்த ஒரு தகவல்.

அதாவது அம்பைக்கொண்டு எய்தவனைக் குறி வைத்து காய் நகர்த்தப்படுகின்றது எனலாம்.

ஏன்..... ஸ்டாலின் குறிவைக்கப்பட்டுள்ளார் என்பதற்குக் காரணம் தேடப் பெரிய ஆய்வு தேவையில்லை. தி.மு.க தலைவர் கருணாநிதியை அடுத்து ஜெயலலிதா

பரமாவரியாண

கருணாநிதியின் மகன் ஸ்ராலினையே கருதுகிறார். இந் நிலையில் எதிர்வரும் சட்டச் சபைத் தேர்தலை முன் வைத்தே இந்தச் சம்பவங்கள் இணைக்கப் படு கின்றன. அதாவது தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா எதிர்கால சட்டசபைத் தேர்தலில் தனது பிர்தான எதிரியாக ஸ்டாலினைக் குறி வைத்துள்ளார். அதனால் ஸ்டா லினைக்கைது செய்வதன் மூலமோ அல்லது வழக்கு, நீதிமன்றம் என்று இழுத்தடித்து அவரது இமேஜை மழுங்கடித்து அவரைத் தேர்தலில் இருந்து புறந் தள்ளுதல் அன்றித் தோற்கடித்தல் அவரது



சுந்திரேசஜயர்

பிரதான குறிக்கோள் என்றும், கூறுதல் தவறாகமாட்டாது. அதனால் அப்புவின் கைது நிச்சயம் ஸ்டாலினைப் பதறவைக்கும், வைக்க வேண்டும் என்பதே தமிழகப்

பொலிசாரது அடுக்கடுக்கான அதிரடி நடவடிக்கைகளின் பின்னால் இருப்பதாகக் கொள்ளலாம்.

அதாவது ஆன்மீக வாதியின் கைதில் தொடங்கி அரசியல்வாதியின் கைதில் முற்று வைப்பதுதான் தமிழகப் பொலிசாரின் திட்டம் என்றுதான் நம்பத் தோன்றுகின்றது.

இதனிடையே ஸ்டாலினும், ரமேஷும் நெருக்கமானவர்களே தவிர ஸ்டாலினால் ரமேஷ் தற்கொலை செய்யவில்லை என்றும் ரமேஷ்வேறு காரணங்களாலேயே குடும்பத்தோடு தற்கொலை செய்துகொண்டதாகவும் ஸ்டாலின் தரப்பினர் கருத்து முன் வைக்கின்றனர்.

இதனிடையே சங்கரராமன் கொலை வழக்கில் கைது செய்யப்பட்ட 21 பேரில் ஒரு வரான சின்னா, நீதிமன்றத்தில் தன்னிடம் தமிழகப் பொலிசார் மிகவும் கொடூரமாக நடந்து கொண்டதையடுத்தேதான் சங்கரராமன் கொலைக்கு உடந்தை என்று வாக்கு மூலம் அளித்தாக நீதிமன்றத்தை அதிர வைத்திருக்கின்றார்.

இதனை வைத்துப் பார்க்கும் போது அப்புவும் கூட இவ்வாறு தமிழகப் பொலிசாரின் சித்திரவதைகளுக்கு ஈடுகொடுக்க முடியாது சங்கராச்சாரியார் ஸ்டாலினுக்கு எதிராகக் கூட வாக்கு மூலம் அளிக்கக் கூடும். அல்லது அப்பு அரசியல் புள்ளிகளுக்கு விரோதமாக குறிப்பாக ஸ்டாலினுக்கு எதிராகக் கூட சாட்சியம் கூறக்கூடும்.

மறுபுறம் அப்பு தமிழகப் பொலிசாருக்கு ஒத்துழைப்பு வழங்காத பட்சத்தில் சிறையில் கூட மரணத்தைத் தழுவக் கூடும். அப்புவுடன் எல்லா உண்மைகளும் கூட மரணித்துப் போகலாம்.

என்றாலும் தற்போது சங்கரராமன் கொலை தொடர்பாக அப்பு அளித்த வாக்கு மூலத்தையடுத்து காஞ்சி மட நிர்வாகி சுந்தரேச ஐயர் கைது செய்யப்பட்டுள்ளதைப் பார்க்கையில் அப்பு எத்தகைய நிலையில் இவ்வாறு வாக்கு மூலம் அளித்துள்ளார் என்பது தமிழகப் பொலிசாருக்கே வெளிச்சம்.

இதனிடையே பாரதிய ஜனதாவின் முன்னாள் பிரதமர் வாஜ்பாய், அத்வானி,



அப்பு

சுஷ்மா சிவராஜ் உள்ளிட்ட ஐந்து பேர் பிரதமர் மன்மோகன் சிங்கிடம் சங்கராச்சாரி! யார் விடயத்தில் தமிழக அரசைக் கொஞ்சம் தட்டிவைக்க வேண்டும் என்பது போலவே

கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதில் விந்தைகள் இரண்டு. ஒன்று காங்கிரஸ் கூட்டணி ஆட்சியை விமர்சிப்பதும், பாராளுமன்ற இரு அவைகளையும் முடக்கிவரும் பாரதிய ஜனதாவோ இன்று காங்கிரஸ் கூட்டணியிடமே தமிழக அரசைக் கட்டுப்படுத்துமாறு முறையிடுவது விந்தையின்றி வேறில்லை.

அதுமட்டுமன்றித் தமது ஆட்சியின் போது தமிழக அரசு பொடோ சட்டத்தைத் தவறாகப் பயன்படுத்தும் போதெல்லாம் மாநில அரசு விடயத்தில் மூக்கை நுளைக்க முடியாது என்று நழுவிய அதே அத்வானிதான் இன்று சங்கராச்சாரியார் கைதானவுடன் மட்டும் தமிழக அரசு விடயத்தில் மத்திய அரசான காங்கிரஸ் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்கின்றார்.

அதுமட்டுமல்லாது அ.தி.மு கவுடன் தோழமை என்று இருந்து விட்டு இன்று மாநிலத்தில் அக்கட்சி முறைகேடாக நடந்து கொள்கின்றது எனக் குற்றம் சாட்டி ஜெயலலிதாவிடம் கெஞ்சுவதைவிட சண்டைக்காரன் காலில் விழுவது மேல் போன்றுதான் இருக்கின்றது.

அ.தி.முகவுடன் பாரதிய ஜனதாக் கட்சியின் உறவுக்குப்பாலமிட்ட வரான அத்வானி கூட இன்று தமிழக முதல மைச்சரை நெருங்க முடியாமலா இருக் கின்றார்.......? என்றும் விமர்சனம் இல்லாம லில்லை.


ஏற்கனவே சங்கராச்சாரியார் கைதுக்குப் பின்னால் சோனியாகாந்தி இருப்பதாக விஸ்வஹிந்து பரிசத் கோஷமிட்ட நிலையும் இருக்கின்றது. விஸ்வஹிந்து பரிசத்தின் கோஷத்திற்குப்பின்னால் பாரதிய ஜனதாதான் இருந்ததாகக் காங்கிரஸ் கட்சியினர் இன்றும் முணுமுணுக்கத் தவறவில்லை.

எனவே மத்திய அரசு சங்கராச்சாரியார் விவகாரத்தை எப்படிக் கையாளப் போகின்றது என்பது பெரியவினாவாகும்.

என்றாலும் தமிழக அரசு அப்பு எனும் ஒரே கல்லில் ஸ்டாலின் சங்கராச்சாரியார் எனும் இரண்டு மாங்காய்களை இலக்கு வைத்து வீழ்த்துவதில் மிகவும் தீவிரமாக வுள்ளதாகவே நம்பத் தோன்றுகின்றது.

ஆனாலும் அப்பு அளிக்கும் வாக்குமூலம் சங்கராச்சாரியாரைத் தாக்க ஆரம்பித்துள்ளது. இல்லையேல் சங்கரமட நிர்வாகி கைது செய்யப்பட வேறு காரணம் இருக்க முடியாது.

எனவே அப்புவின் கைது எதிர்க்கட்சியான தி.மு.கவுக்கு ஆப்பு வைக்கப்போகின்றதா....... அல்லது தி.மு.க. அதிலிருந்து விடுபட



ஸ்ராலின்

நடவடிக்கைகளை முடுக்கி விடப்போகின்றதா என்பதே இன்று அப்புவின் கைது எழுப்புகின்ற வினாவாகும்.

## பாண்டியன்குளம் பகுதியில் அரசுக்கு எதிராக ஆர்ப்பாட்டம்

சிறிலங்கா ஆட்சியாளர்களிற்கு எதிரான ஆர்ப்பாட்ட நிகழ்வொன்று பாண்டியன்குளம் பிரதேசத்தில் கொல்லவிளாங்குளம் பகுதியில் இடம் பெற்றுள்ளது.

கொல்லவிளாங்குளம் ஊரகதேசிய எழுச்சிப் பேரவையின் ஏற்பாட்டில் கடந்த வியாழனன்று காலை 7.00 மணியளவில் கொல்லவிளாங்குளம் சந்தியில் இருந்து ஆரம்பமான ஆர்ப்பாட்ட நிகழ்வில் சிறிலங்கா ஆட்சித் தலைவி சந்திரிகாவின் கொடும்பாவி வீதி வழியாக எடுத்துச் செல்லப்பட்டு கொல்லவிளாங்குளம் பாடசாலைக்கு முன்பாக வைத்து எரிக்கப்பட்டது.

இவ் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டோர் “இடைக்கால அரசைத் தரவேண்டும், எமது நிம்மதியான வாழ்க்கையைத் தரவேண்டும்” எனும் கோஷங்களை எழுப்பினர். மேற்படி ஆர்ப்பாட்டத்தில் பொது அமைப்புக்கள், துறைசார்ந்தவர்கள் எனப் பலதரப்பட்டோரும் கலந்து கொண்டனர். (24)

## சிறில.விமானப் படை விமானங்களை மீளப்பெற இராஜதந்திர முயற்சி

உக்ரைனிற்கு திருத்த வேலைகளுக்காகக் கொண்டு செல்லப்பட்டுள்ள சிறிலங்கா விமானப் படைக்குச் சொந்தமான இரண்டு விமானங்களையும் இராஜதந்திர ரீதியில் திருப்பிக் கொண்டு வர சிறிலங்கா அரசாங்கம் நடவடிக்கைகள் எடுத்துள்ளன. இந்த விமானங்கள் இரண்டும் திருத்த வேலைகள் பூர்த்தியடைந்து தற்போது உக்ரைனிலுள்ள விமானக் கம்பனியில் நிறுத்தப்பட்டுள்ளன. இந்த விமானங்கள் ரஷ்ய வான் பரப்பு ஊடாக இலங்கைக்கு வர ரஷ்ய சுங்கத் திணைக்களம் இது வரை அனுமதியளிக்கவில்லை. .இதனையடுத்தே ரஷ்யாவுடன் இராஜதந்திர ரீதியில் தொடர்புகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

# சிங்களவரின் தாக்குதல்குறித்து முறையிடச்சென்ற வவுனியா பேருந்து சாரதி பொலிசாரால் கைது

## ஆட்சேபித்து பேருந்து சேவை பகிஷ்கரிப்பு

(வவுனியா செய்தியாளர்)

**வவுனியா மக்கள் மயப்படுத்தப்பட்ட பேருந்து சேவையின் சாரதி வவுனியா பொலிசாரால் கைது செய்யப்பட்டமையால் நேற்று வவுனியாவில் மக்கள் மயப்படுத்தப்பட்ட பேருந்து சேவை இடைநிறுத்தப்பட்டு பகிஷ்கரிப்புப் போராட்டம் நடைபெற்றது.**

நேற்று முன்தினம் வவுனியா மக்கள் மயப்படுத்தப்பட்ட பேருந்து சேவையின் பேருந்து சாரதி, நடத்துனர் ஆகியோருக்கும் வவுனியாவில் இருந்து கொழும்பு நோக்கிச் சென்ற தனியார் பேருந்து சாரதி, நடத்துனருக்கும் இடையே அநுராதபுரம் பகுதியில் கைகலப்பு ஒன்று ஏற்பட்டு அது கோஷ்டி மோதலாக மாறியது இதனால் சிங்கள பெரும் பான்மையினரால் வவுனியா பேருந்து சாரதி, நடத்துனர் தாக்கப்பட்டமை குறித்து முறைப்பாடு தெரிவிப்பதற்காக வவுனியா பொலிஸ் நிலையத்திற்குச் சென்ற தமிழ்ச் சாரதி பொலிசாரால் கைது செய்யப்பட்டார்.

இதனைத் தொடர்ந்து நேற்று வவுனியா மக்கள் மயப்படுத்தப்பட்ட பேருந்து சேவையினர் பேருந்து சேவைய்யை இடைநிறுத்தி பகிஷ்கரிப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர் இதனையடுத்து வன்னிமாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிவநாதன். கிஷோர் பொலிஸ் அத்தியட்சகருடன் தொடர்பு கொண்டு சாரதியை விடுதலை செய்யுமாறு கோரினார். அக் கோரிக்கையை. ஏற்றுக் கொண்ட பொலிஸ் அத்தியட்சகர் சாரதியை விடுதலை செய்யுமாறு பொலிசாரை பணித்தார்.சாரதி விடுதலை செய்யப்பட்டதனையடுத்து நண்பகல் அளவில் பேருந்து :சேவைகள் ஆரம்பிக்கப்பட்டன. (10)


# வவுனியாவில் சனவரி முதல் பாணின் விலை 3 ரூபா அதிகரிப்பு

(வவுனியா செய்தியாளர்)

சனவரி முதலாம் திகதி முதல் வவுனியாவில் பாணின்விலை 16 ரூபாவாக அதிகரிக்கப்படவுள்ளது.

வவுனியா அரச செயலக மாநாட்டுமண்டபத்தில் அரச அதிபர் க. கணேஷ் தலைமையில் நடைபெற்ற ". வெதுப்பக உரிமையாளர்களின் பிரச்சினைகளும் தீர்வுகளும் " என்ற கூட்டத்திலேயே இம்முடிவு எடுக்கப்பட்டுள்ளது. இக்கூட்டத்தில் வவுனியா மாவட்ட வெதுப்பக உரிமையாளர் சங்க பிரதிநிதிகளும், பாவனை யாளர் பாதுகாப்புச் சங்க பிரதிநிதிகளும் கலந்துகொண்டனர்.

கோதுமை மாவிற்கு ஏற்பட்டுள்ள தட்டுப்பாட்டையும், விலை ஏற்றத்தினையும், ஏனைய பொருட்களின் விலை ஏற்றத்தினையும் கருத்தில் கொண்டு பாண்விலையை அதிகரிக்குமாறு வெதுப்பக உரிமையாளர் சங்கப் பிரதிநிதிகள் கோரிக்கை விடுத்தனர். இக் கோரிக்கையை ஆராய்ந்த பாவனையாளர் பாதுகாப்புச் சங்கப் பிரதிநிதிகள் அக்கோரிக்கையை ஏற்றுக்கொண்டனர். அதற்கிணங்க சனவரி முதலாம் திகதி முதல் 400 கிராம் நிறையுடைய பாண் ஒன்றின் அதிகூடிய சில்லறை விலையாக 16.00 ரூபா நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதுவரை காலமும் இப்பாணின் விலை 13.00 ரூபாவாக இருந்தமை குறிப்பிடத்தக்கதாகும். (10)



வழிகால்கள் சீர்செய்யப்படாமையின் காரணமாக பரந்தன் சந்திப்பகுதியில் வெள்ள நீர் வழிந்தோடமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது. பரந்தன் சந்தி முல்லை வீதியில் வழிகால்கள் துப்புரவு செய்யப்படாது உள்ளமையினை படத்தில் காணலாம்.

[படம்- சோதி]

# கொழும்பில் விடுதியொன்றில் சுற்றிவளைப்பு தப்பியோடிய படையினர் உட்பட பலர் கைது

## -ஆயுதங்களும் கண்டுபிடிப்பு

கொழும்பு பகத்தலை வீதியில் நேற்று முன்தினம் விடுதியொன்றை சுற்றிவளைத்த பொலிசார் இராணுவத்திலிருந்து தப்பிச் சென்றவர்கள் உட்பட பலரைக் கைது செய்துள்ளனர்.

இதன்போது ஆயுதங்கள் சிலவும் கைப்பற்றப்பட்டன. பொலிஸ் விசேட அதிரடிப் படையினர் இந்த சுற்றிவளைப்பை மேற்கொண்டுள்ளனர். ரி-56 ரக துப்பாக்கி, துப்பாக்கி ரவைகள். மகசீன்கள், இரட்டைக் குழாய் துப்பாக்கிகள் மற்றும் கணினி என்பனவும் இச்சுற்றிவளைப்பின் போது கைப்பற்றப்பட்டன.

குறிப்பிட்ட விடுதியில் பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்ட 9 பேரில் 6 பேர் இராணுவத்திலிருந்து தப்பிச் சென்றவர்கள் என்று தெரியவருகின்றது.இதன்போது 17 வயதிற்கும் 25 வயதிற்கும் இடைப்பட்ட 30 யுவதிகளும் கைது செய்யப்பட்டுள்ளார்கள். இந்த விடுதியின் உரிமையாளர் தற்பொழுது தலைமறைவாகியிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

## -வடக்கு-கிழக்கு மாகாண-

# பொது நிர்வாக உள்ளூராட்சி அமைச்சில் நியமனம் பெறும் பட்டதாரிகளின் விபரம்

(வவுனியா செய்தியாளர்)

வடக்கு-கிழக்கு மாகாண பொது நிர்வாக உள்ளூராட்சி அமைச்சின் கீழ் இயங்கும் அலுவலகங்களில் நியமனம் பெறும் பட்டதாரிகளில் கிளிநொச்சி, முல்லைத்தீவு, மாவட்ட பட்டதாரிகளின் விபரம் வருமாறு:-

### கிளிநொச்சி மாவட்டம்

தர்மஞானசிங்கம் அஜந்தா முல்லைவீதி பரந்தன், சேனாதி ராஜா கவிதா குமரபுரம், பரந்தன், செல்வரட்ணம் அகிலேஸ்வரன் தட்டுவன்கொட்டி ஆனையிறவு, கிளிநொச்சி, சண்முகநாதன் ஜீவகன் தட்டுவன்கொட்டி ஆனையிறவு, திருநாவுக்கரசு திசரூபன் 7ஆம் யூனிட், இராமநாதபுரம், கிளிநொச்சி, தேவராஜா ஸ்ரீபன் றஞ்சிதா பிரமந்தனாறு, தருமபுரம் பரந்தன், திருச்செல்வம் பிரபாகரன் கலவெட்டித்திடல் புளியம்பொக்கணை, கருணானந்தசிவம் மகிந்தன் "யாழ்.ஸ்பொட்" முதலாம் ஒழுங்கை திருநகர் வடக்கு கிளிநொச்சி, சந்திரப்பிரியா சந்திரசேகரம் உருத்திரபுரம் கிளிநொச்சி, கயல்விழி முத்துக்குமாரு உருத்திரபுரம் கிளிநொச்சி, கனகலிங்கம் ஞானராஜா உருத்திரபுரம் கிளிநொச்சி றம்யாதேவி செல்வரட்ணம் கண்டிவீதி கிளிநொச்சி (கரடிப்போக்கு), அஜந்தரூபி கந்தசாமி சேர்விஸ்றோட் கிளிநொச்சி. ஜெயரட்ணம் ஜெயச்சந்திரன் காந்திகிராமம் கோணாவில், மொறின் ஜயந்தா ஜஸ்ரின் கன்ஷஸ் 4ஆம் வட்டாரம் மண்டைதீவு, சாந்தலிங்கம் விமலகுமார் கணேசபுரம் கிளிநொச்சி, செல்வி ஜமுனா அருமைநாதன் "சுகந்தபவனம்" கரடிப்போக்கு கிளிநொச்சி, செல்வி கணேஜினி கணேஷ் சில்வாறோட் வட்டக்கச்சி கிளிநொச்சி, சந்திரவதனி கஜரோகனர் உருத்திரபுரம் கிளிநொச்சி, அப்பாப்பிள்ளை சோதிமலர் வன்னேரிக்குளம் கிளிநொச்சி, தர்சினி தனுஸ்கோடி ஆறுமுகம் றோட் வட்டக்கச்சி கிளிநொச்சி, செல்வி கயல்விழி நடராஜா சில்வாவீதி வட்டக்கச்சி கிளிநொச்சி, செல்வி யாழினி பரமலிங்கம் ஆறுமுகம்றோட் வட்டக்கச்சி கிளிநொச்சி, திருமதி சுதாகரன் பிரியதர்சினி கட்சன் றோட் வட்டக்கச்சி கிளிநொச்சி, பத்மநாதன் பரமோதயன் சில்வா றோட் வட்டக்கச்சி கிளிநொச்சி, சுரேஸ்குமார் தாரணி கணேசபுரம் கிளிநொச்சி, நெற்சிங்கம் சுரேஸ்குமார் கணேசபுரம் கிளிநொச்சி, செல்வராஜா திருவருட்செல்வன் கணேசபுரம் கிளிநொச்சி, சிவராஜினி நடராஜா ஆனந்தபுரம் கண்டிறோட் கிளிநொச்சி, K பரராஜ்சிங்கம் சுஜீவன் சில்வாறோட் வட்டக்கச்சி கிளிநொச்சி, கோபாலகிஷ்ணன் நந்தினி ஸ்கந்தபுரம் கிளிநொச்சி, சுகந்தினி நாகமுத்து கோணாவில் கிளிநொச்சி, கந்தசாமி சிவகுமார் உருத்திரபுரம் கிளிநொச்சி, நாகலிங்கம் ஜெயகரன் கனகபுரம் கிளிநொச்சி, சுந்தரலிங்கம் சுகந்தன் உதயநகர் மேற்கு கிளிநொச்சி, பசுபதிப்பிள்ளை சுரேந்திரன் உருத்திரபுரம் கிளிநொச்சி, தோமஸ் விமலதாஸ் உருத்திரபுரம் கிளிநொச்சி, பவுலினா மேரிஸ்டானிஸ்லஸ் கிளாலி எழுதுமட்டுவாள், இராஜரட்ணம் அரவிந்தன் மட்டுவில் நாடு கிழக்கு பூநகரி, ஜெயந்தினி திசநாதன் பாடசாலைவீதி 4ஆம் கட்டை மயிலிட்டி குடியிருப்பு ஜெயபுரம் பூநகரி, முருகுப் பிள்ளை முத்துக்குமரன் பல்வராயன்கட்டு கிழக்கு கிளிநொச்சி, திருநாவுக்கரசு யோகநாதன் கறுக்காய்த்தீவு பூநகரி, விமலராணி பேரம்பலம் 4ஆம்கட்டை பூநகரி, கலாஜினி வல்லிபுரநாதன் மட்டுவில்நாடு (மேற்கு) பூநகரி, வீரசிங்கம் சிவனேசன் ஆலங்கேணி பூநகரி.

### முல்லைமாவட்டம்

நடராஜா சுந்தரராஜன் அரசினர் வைத்தியசாலை நட்டாங்கண்டல் மாங்குளம், கந்தசாமி கருணாகரன் கரும்புள்ளியான் நட்டாங்கண்டல் மாங்குளம், நடராஜா ராகினி செல்வபுரம் வவுனிக்குளம், சரவணமுத்து நந்தசீலன் பாலிநகர் வவுனிக்குளம், சண்முகலிங்கம் ஜெயரஞ்சன் கரும்புள்ளியான் நட்டாங்கண்டல், வல்லிபுரம் ஜெயநாதன் கரும்புள்ளியான் நட்டாங்கண்டல் மாங்குளம், அமிர்தலிங்கம் சுதர்சன் பாலிநகர் வவுனிக்குளம், ஜெயரஞ்சனி தியாகராஜா 3ஆம் வட்டாரம் முள்ளியவளை, பொன்னுத்துரை குலேந்திரன் சிலாவத்தை முல்லைத்தீவு, மாலினி வேகாவனம் 7ஆம் வட்டாரம் குமுழமுனை முல்லைத்தீவு, காஞ்சனா மகாலிங்கம் கரைச்சிக்குடியிருப்பு முல்லைத்தீவு, தம்பையா ஜெகதீஸ்வரன், 6ஆம் வட்டாரம் குமுழமுனை முல்லைத்தீவு, சிறிலதா திருக்குமார் கணுக்கேணி மேற்கு முள்ளியவளை, கவிதா கதிர் காமத்தம்பி 6 ஆம் வட்டாரம் குமுழமுனை முள்ளியவளை, சிவஞானம் சிவபாலசுந்தரம் 7 ஆம் வட்டாரம் குமுழமுனை முள்ளியவளை,சுகந்தினி சின்னத்துரை சுரேந்திரா களஞ்சியம் வற்றாப்பளை, முள்ளியவளை, லிங்கேசியா யசோதரலிங்கம் வற்றாப்பளை முள்ளியவளை, துரைசிங்கம் கலைவாணி 3 ஆம் வட்டாரம் முள்ளியவளை, கந்தையா குணசீலன் 6 ஆம் வட்டாரம் குமுழமுனை முள்ளியவளை, ஜெயவாணி அமிர்தசேகரம் முள்ளி வாய்க்கால். கிழக்கு வெட்டுவாய்க்கால், முல்லைத்தீவு, வேலாயுதம் தர்மினி மக்கிப்புலவு றோட் கணுக்கேணி; கிழக்கு, வெட்டுவாய்க்கால் முள்ளியவளை, முல்லைத்தீவு. சூசைப்பிள்ளை அருள்நாதன் மணற்குடியிருப்பு முல்லைத்தீவு, சுப்பிரமணியம் சுகிர்ரூபன் 3 ஆம் வட்டாரம் முள்ளியவளை முல்லைத்தீவு, பொன்னையா கலைதேவி 3 ஆம் வட்டாரம், முள்ளியவளை முல்லைத்தீவு, கீதா ஜெயசீலன் "வல்லமனை" மீசாலை கிழக்கு மீசாலை. இரட்ணராஜா அன்ரன் யூட்டளஸ் சிலாவத்தை முல்லைத்தீவு, வினாயகமூர்த்தி தயாபரன் 4ஆம்வட்டாரம் முள்ளியவளை முல்லைத்தீவு, பிரமேந்திரன் சுகிர்தா 2 ஆம் வட்டாரம் முள்ளியவளை, சிவசுந்தரம் ரஜனிகாந்தன் 7 ஆம் வட்டாரம் புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு, கௌசலா உதயதாஸ் 2 ஆம் வட்டாரம் புதுக்குடியிருப்பு முல்லைத்தீவு, நிக்ஷனா கனகசபை விசுவமடு முல்லைத்தீவு, அழகேந்திரராஜா சசிகுமார் 7 ஆம் வட்டாரம் சிவநகர் புதுக்குடியிருப்பு முல்லைத்தீவு, குருகுலசிங்கம் சங்கர் ஐயனார்திடல் தம்பலகாமம் திருகோணமலை, மேரிசசிகலா மரியாம்பிள்ளை, 8 ஆம் வட்டாரம் மந்துவில் புதுக்குடியிருப்பு முல்லைத்தீவு, கோகிலவதனி அருமைநாயகம் 2 ஆம் வட்டாரம் புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு, விஜேஸ்வரி வெள்ளைச்சாமி 8 ஆம் வட்டாரம் மந்துவில் புதுக்குடியிருப்பு முல்லைத்தீவு, சிவராஜா பொன்விழி விசுவமடு முல்லைத்தீவு, ஜெயபாலன் சண்முகானந்தம் 10 ஆம்வட்டாரம் புதுக்குடியிருப்பு முல்லைத்தீவு, தணிகாசலம் பாஸ்கரன் 4 ஆம் வட்டாரம் புதுக்குடியிருப்பு முல்லைத்தீவு, கேதீஸ்வரன் சுபாஜினி 4 ஆம் வட்டாரம் சிவநகர் புதுக்குடியிருப்பு முல்லைத்தீவு, சுதர்ஜினி திவ்யணி விசுவமடு முல்லைத்தீவு, நடராஜா கல்யாணி 2 ஆம் பகுதி விசுவமடு முல்லைத் தீவு, சிறிதரன் பவித்ரா விசுவமடு மேற்கு முல்லைத்தீவு, கலாரஜனி சின்னையா 4ஆம் வட்டாரம் கோம்பாவில் புதுக்குடியிருப்பு முல்லைத்தீவு., சுதாஜினி ஐயாத்துரை கொக்காவில் றோட் துணுக்காய் ,தர்சினி காசிநாதன் "கனகபவனம்" துணுக்காய், வல்லிபுரம் ஜெகதீஸ்வரன் திருவள்ளுவர்நகர் யோகபுரம் மல்லாவி, றோகினி நிமலதாஸ் 3 ஆம் யுனிட் பாரதிநகர் யோகபுரம் மல்லாவி, கந்தையா ஜெயக்குமார் கற்சிலைமடு ஒட்டுசுட்டான் முல்லைத்தீவு, நர்மதா சிறிதரன் மிதிலை, புளியங்குளம் ஒட்டுசுட்டான் முல்லைத்தீவு, செல்வி பொன் ராஜிராஜசேகரம், சண்முகநாதன் சுகிர்தா தண்டுவான் நெடுங்கேணி, செல்வராஜ் ரவிந்திரன் 17 ஆம் கட்டை கருவலங்கண்டல் ஒட்டுசுட்டான் முல்லைத்தீவு, இராநகை இராமதேவன் "ஆனந்தமனை" தச்சடம்பன், மாங்குளம், கவிதா தங்கராஜா சமளங்குளம்,ஒட்டுசுட்டான்.

# சூரியகல விற்பனை

சூரியகலத் தொகுதிகளை வீடுகளில் பொருத்த வேண்டும் என்பதற்காக பெருந்தொகைப் பணத்தைச் செலவு செய்து சூரியகலங்களைக் கொள்வனவு செய்து பல்வேறு சிரமங்களை எமது வாழிக்கையாளர்கள் எதிர்கொள்ள வேண்டாம். இலங்கையில் ஏழுவகையான சூரிய கலக் கம்பனிகள் சூரியகலத்தை விநியோகிக்கின்றன.

முல்லை மாவட்ட சி.க.கூ. சமாசம் செல்சோலர் கம்பனியின் சூரியகலங்களை வாழிக்கையாளர்களுக்குப் பொருத்தி மனங்களில் இடம்பிழித்து வருகிறது.

போலிகளை நம்பி ஏமாறாதீர்கள் உங்கள் தெரிவுக்கு மிகச்சிறந்தது செல்சோலர். அதனைப்பெற நாடவேண்டிய ஒரேஒரு முன்னணி நிறுவனம் முல்லை மாவட்ட சி.க.கூ. சமாசம். சமாசம் வாழிக்கையாளர்களின் நலன்கருதி ஒவ்வொரு உ.அ.அதிபர் பிரிவிலும் உள்ள சி.க.கூ.பிரதேச அலுவலகங்களிலும் சூரியகலங்களை கடனுக்கும் உடன் காசுக்கும் விற்பனைக்கு விட்டுள்ளது. நீடித்த பயன், பிரகாசமான ஒளி, வீட்டில் பொருத்தும் வரையான இலவச சேவை, விற்பனையின்பின் சேவை என்பவற்றைப்பெற இன்றே நாடவேண்டியது முல்லை மாவட்ட சி.க.கூ. சமாசம்.

தகவல்:-
கா.குணசிங்கம்,
தலைவர்,
மு/மாவட்ட சி.க.கூ. சமாசம்.

(சி-10536)

# அரச ஊழியர்களுக்கான சம்பள உயர்வு இந்த மாத இறுதிக்குள் வழங்கப்படுமாம்

வரவு - செலவுத்திட்டத்தின்படி அரசாங்க ஊழியர்களுக்கான சம்பள உயர்வுகள் இந்த மாத இறுதிக்குள் வழங்கப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் அரசாங்க ஊழியர்களின் சம்பளங்கள் வழங்கப்பட்ட போதும் அண்மையில் பரிந்துரைக்கப்பட்ட சம்பள உயர்வுகள் வழங்கப்படவில்லை என ஐக்கிய தேசியக்கட்சி குற்றம் சுமத்தியுள்ள நிலையிலேயே அரசாங்கம் இதனை அறிவித்தது வரவு செலவுத்திட்டத்தின் மூலம் அரசாங்க ஊழியர்களும் ரூ.30% சம்பள உயர்வுகள் அறிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (32)

## கலந்துரையாடல்

(ஒட்டுசுட்டான்)

நாளை காலை 10.00 மணியளவில் கால் நடை வைத்தியர்கள் ,பிரதேச இணைப்பாளர்கள், விலங்கு வேளாண் பகுதி திட்ட இணைப்பாளர்கள் ஆகியோருக்கான கலந்துரையாடல் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனப் பொறுப்பாளர் தலைமையில் வட்டக்கச்சி ஒருங்கிணைந்த மாதிரிப்பண்ணையில் நடைபெறவுள்ளது.

எனவே இதில் சம்பந்தப்பட்டோர் கலந்துரையாடலில் கலந்து கொள்ளுமாறு பொருண்மிய செய்திக்குறிப்புக் குறிப்பிடுகின்றது. (05)

## புத்தகக்கண்காட்சியும் விற்பனையும்

எமது நிறுவனத்தால் அனைவருக்கும் பயன்தரக்கூடிய விதத்தில் மிகவும் கோலாகலமாக நடைபெற்ற புத்தகக் கண்காட்சியும் விற்பனையும நூலகங்கள், பிரதேச சபைகளின் பயன்கருதி டிசம்பர் 31ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது. சிற்பம், வைத்தியம் உள்ளிட்ட பல புதிய வெளியீடுகளையும் நீங்கள் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய இடம்

ஸ்ரீலங்கா புத்தகசாலை,
234,கே.கே.எஸ்.வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே.021-2222573

(சி-11038)

# முக்கிய அறிவித்தல்

## வருடாந்த பொதுக்கூட்டம்-2004

எதிர்வரும் 2004.12.30 ஆம் நாள் வியாழக்கிழமை காலை 10.00 மணிக்கு பரந்தனில் அமைந்துள்ள சங்கத்தின் தலைமைச் செயலகத்தில் வருடாந்தப் பொதுக்கூட்டம் நடைபெறவுள்ளதினால். மீளாய்வு செய்யப்பட்டு உறுப்புரிமை பெற்றுள்ள அனைத்து உரிமையாளர்களையும். நெறியாளர் குழு உறுப்பினர்களையும் தவறாது இப் பொதுக் கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

## நிகழ்ச்சி நிரல்

01. பொதுச்சுடர் ஏற்றல்
02. கொடி ஏற்றல்
03. அகவணக்கம்
04. தலைவர் தலைமையுரை
05. உதவி ஆணையாளர் உரை
06. புதிய முதலீடுகளுக்கான அங்கீகாரம்
07. புதிய நிர்வாக உறுப்பினர்கள் தெரிவு
08. சிறப்புரை
09. ஏனைய விடயங்கள்
10. நன்றியுரை

தலைவர்
கி.பாஸ்கரன்
வ.பி.பா.ஊ.கூ.சங்கம்
பரந்தன்.

செயலாளர்
க.சி.மணியம்
வ.பி.பா.ஊ.கூ.சங்கம்
பரந்தன்.

(சி.10993)

# அந்தியேட்டி நினைவு நாள்

அன்னை மடியில் 04 - 01 - 1954



காலனின் பிடியில் 07 - 01 - 2004

அமரர்

## சுப்பிரமணியம் - மயில்வாகனம்

வட்டுவாகல், முல்லைத்தீவு

அந்தியேட்டி நாள்
26.12.2004

அன்பின் எம் தெய்வ அப்பாவே
ஆறாத துயரில் எம்மை ஆழ்த்தினீர்
உங்கள் கருணைமுகம் காணத் துடிக்கின்றோம்.
உங்களுடைய ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

**குறிப்பு:-** 26.12.2004 அன்று கொழும்பு அவிசாவளையில் அன்னாரின் சகோதரியின் இல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டி கிரிகைகளில் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்களைக் கேட்டுக்கொள்கின்றோம்.

என்றும் உங்கள் துயரில் வாடும்
**மனைவி, பிள்ளைகள்.**

(சி-10535)

# பணிநிலை வெற்றிடம்

முல்லைத்தீவு மேற்கு பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்[வ/து] பிரதான வீதி முள்ளியவளை, கரைதுறைப்பற்று உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்கு உட்பட்ட "ஆண்" பாலாரிடம் இருந்து பின்வரும் பதவிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

### 01. பதவி:- கிளைமுகாமையாளர்

(i) சம்பள குறியீட்டு இலக்கம்:-208/12(31/99 சுற்றறிக்கைக்கு அமைவாக)
(ii) சம்பள அளவுத்திட்டம் :- (4250+1250) 5500/= (80X10-90X10)-7200/=
(iii) வயதெல்லை :- 21-45
(iv) தகைமை (எ):-க.பொ.த சாதாரணதரத்தில் கணிதம்,தமிழ் ஆகியன உட்பட நான்கு பாடங்கள் திறமைச் சித்தியுடன் ஆறு பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

அல்லது

(பி) கூட்டுறவுப் பணியாளர் 13ஆவது சம்பளத்திட்டத்தில் எழுதுனர் அல்லது விற்பனைத்துறையில் ஒரு வருடத்திற்குக் குறையாத அனுபவம் இருத்தல் வேண்டும்.

### 02. பதவி:- உழவு இயந்திர சாரதி

(i) சம்பள குறியீட்டு இலக்கம்:-312/13(31/99சுற்றறிக்கைக்கு அமைவாக)
(ii) சம்பள அளவுத்திட்டம்:- (4000+1250)-5250/= (75X10-80X10) -6800/=
(iii) வயதெல்லை:- 25-45
(iv) தகைமை:- 05ஆம் வகுப்பு சித்தியடைந்திருத்தல் வேண்டும் அத்துடன் பஸ்/லொறி/பெட்டியுடன் உழவு இயந்திர ஓட்டுநருக்கான அனுமதிப்பத்திரமும், நான்கு வருட அனுபவமும் இருத்தல் வேண்டும்.

மேற்குறித்த பதவிகளுக்கு விண்ணப்பிப்போர் எதிர்வரும் 2005-01-10ஆந் திகதிக்கு முன்பதாக எமக்குக் கிடைக்கக் கூடியதாக பதிவுத்தபால் மூலமாக "தலைவர், முல்லை மேற்கு ப.தெ.வ. அ.கூ.சங்கம் (வ/து), பிரதான வீதி, முள்ளியவளை" என்ற முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

தலைவர்,
முல்லை மேற்கு ப.தெ.வ.அ.கூ.சங்கம் (வ/து)
பிரதான வீதி, முள்ளியவளை.

(5075)

### 22-ஆவது சந்தேகநபராக

# சங்கரராமன் கொலை தொடர்பாக காஞ்சி சங்கரமட முகாமையாளர் கைது

**சங்கரராமன் கொலை வழக்கில் புதிய திருப்பமாக, காஞ்சி சங்கரமட முகாமையாளர் சுந்தரேச ஐயர் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டார். அப்புவுக்கு அவர் ரூபா 55 லட்சம் கொடுத்ததற்கான ஆதாரம் சிக்கியதையடுத்தே அவர் கைது செய்யப்பட்டதாக தமிழகப் பொலிசார் கூறுகின்றனர்.**

வரதராஜப் பெருமாள் கோவில நிர்வாகி சங்கரராமன் கொலை வழக்கில், காஞ்சி மடாதிபதி ஜெயேந்திரர், அப்பு உட்பட 21 பேர் இது வரை கைது செய்யப்பட்டுள்ளனர்.

நீண்டநாள் 'தேடுதல் வேட்டை' க்குப் பிறகு சிக்கிய அப்பு, தற்போது நீதிமன்ற அனுமதியுடன் தனிப்படை பொலிசாரின் பிடியில் இருந்து வருகிறார்.



டில்லியில் கடும்பனிபெய்துவருவதால் விமான நிலையம் பெரும்பாதிப்புக்குள்ளாகியுள்ளது. பனி சூழ்ந்த நிலையில் காணப்படும் விமான நிலையத்தை மேலுள்ள படத்தில் காணலாம்

அப்புவிடம் தனிப்படை பொலிஸ் மேலதிகாரி பிரேம்குமார், வரத ராஜு ஆகியோர் தொடர்ந்து விசாரணை நடத்தி வருகிறார்கள். இந்த நிலையில் நேற்று முன்தினம் இரவு 7.30 மணிக்கு காஞ்சி சங்கரமட முகாமையாளர் சுந்தரேச ஐயர் தனிப்படை பொலிசாரின் விசாரணைக்கு அழைக்கப்பட்டார். அவரிடம் அப்புசொன்ன வாக்கு மூல ஒளி ஒலி காட்சிகளைப் போட்டு காண்பித்து தனிப்படை பொலிசார் விசாரணை நடத்தினார்கள். பின்னர் சுந்தரேச ஐயர் சங்கரராமன் கொலை வழக்கில் 22ஆவது குற்றவாளியாக கைது செய்யப்பட்டார். இந்தத் தகவலை தனிப்படை பொலிசார் நேற்று முன்தினமிரவு அதிகாரபூர்வமாக அறிவித்தனர். சுந்தரேச ஐயரை ஏற்கனவே பலமுறை தனிப்படையினர் கட்டளை அனுப்பிவரவழைத்து விசாரணை நடத்தியுள்ளனர்.

இவ்வாறு சுந்தரேச ஐயர்கைதானது சங்கரராமன் கொலை வழக்கில் புதிய திருப்பத்தை ஏற்படுத்தியுள்ளதாகப் பொலிசார் கூறுகின்றனர்.

# உமாபாரதி மீண்டும் பா.ஜ.கவில் இணைப்பு

உமாபாரதி மீதான பதவி நீக்க உத்தரவு இரத்துச் செய்யப்பட்டு மீண்டும் பா.ஜனதாவில் சேர்க்கப்பட்டார்.

மத்திய பிரதேச முன்னாள் முதல் மந்திரியும், பா.ஜனதா கட்சியின் தலைவியுமான உமாபாரதி கடந்த மாதம் 10 ஆம் திகதி கட்சியில் இருந்து தற்காலிகமாக நீக்கி வைக்கப்பட்டார்.

அதற்கு முன்பாக பா.ஜனதா கட்சியின் இரண்டாம் கட்டத் தலைவர்களான வெங்கையா நாயுடு, பிரமோத் மகாஜன், அருண் ஜெட்லி, முக்தர் அப்பாஸ் நக்வி போன்றவர்களுக்கு எதிராக அவர் தாக்குதல் தொடுத்து வந்தார்.

பா.ஜனதா கட்சியின் புதிய நிர்வாகிகள் கூட்டத்தில் கலந்து கொண்ட உமாபாரதி, எந்தவித செல்வாக்கும் இல்லாத சில தலைவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பகிரங்கமாக விமர்சனம் செய்து பேசியதை அடுத்து கட்சித்தலைவர் அத்வானி அவரைப் பதவிநீக்கம் செய்ய உத்தரவிட்டார்.

அப்போது பா.ஜனதா கட்சியின் பொதுச் செயலாளராகவும் உமாபாரதி பதவி வகித்து வந்தார். இந்த நிலையில். கடந்த சில நாட்களுக்கு முன்பு அத்வானி. வாஜ்பாய் ஆகியோருக்கு உணர்வு பூர்வமான கடிதங்களை உமாபாரதி அனுப்பியதுடன் பலமுறை அவர்களைச் சந்தித்துப் பேசினார்.

அதைத் தொடர்ந்து பா.ஜனதா கட்சியில் இருந்து உமாபாரதியை பதவிநீக்கம் செய்து பிறப்பித்த உத்தரவை அத்வானி விலக்கிக் கொண்டார்.



உமாபாரதி பதவிநீக்க உத்தரவு நீக்கப்பட்டதைக் கொண்டாடும் அவரின் ஆதரவாளர்கள்.

# இந்தியாவில் வேலை வாய்ப்புக் கோரி 4 கோடி பேருக்கு மேல் பதிவு

### - தமிழ் நாட்டில் 48 இலட்சம் பேர்

தமிழ் நாட்டில் வேலை வாய்ப்புக் கோரி 48 இலட்சம் பேர் பதிவு செய்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அரசிடம் போதிய நிதி ஆதாரம் இல்லாத காரணத்தால் படித்து வேலையில்லாத இளைஞர்களுக்கு எவ்வித உதவித்தொகையும் அளிக்க இயலாது என மத்திய தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்பு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இந்தியாவில் உள்ள பல்வேறு வேலை வாய்ப்பு அலுவலகங்களில் மொத்தம் 4 கோடியே 7 இலட்சத்திற்கும் அதிகமான படித்த இளைஞர்கள் வேலைவாய்ப்புக் கோரிப் பதிவு செய்திருப்பதாக புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன. தமிழ்நாட்டில் சுமார் 48 இலட்சம் பேர் வேலை வாய்ப்புக் கோரி வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்துள்ளனர். நாட்டிலேயே அதிகபட்சமாக மேற்கு வங்காளத்தில் 69 இலட்சம் பேர் பதிவு செய்து வேலை வாய்ப்பிற்காகக் காத்திருக்கின்றனர்.

31 ஆம் நாள் நினைவில் நாமும்
அமரர்
ஆறுப்பிள்ளை — இராசா
(மயிலிட்டி வடக்கு, காங்கேசன்துறை, யாழ்ப்பாணம்)



தோற்றம்
09-02-1923.

மறைவு
26-11.2004.

தற்காலிக முகவரி:-1 ஆம் வட்டாரம், மு.புதுக்குடியிருப்பு.
*உலகளந்த விநாயகருக்கு உளவாரத் தொண்டர்.
*முக்காலப் பூசைக்கும் முதற் கடமை செய்பவர்.
*பஞ்ச அமிர்தமாக்கும் பணியில் ஆர்வலர்.
*விநாயகர் பாதங்களில் அமரர் ஆத்மாசெல்ல நாமும் பிரார்த்திக்கின்றோம்.

ஆலய பரிபாலனசபை,
உலகளந்த விநாயகர் ஆலயம்,
மு.புதுக்குடியிருப்பு.

(சி.10539)

# அதிநவீன விமானங்கள் கலந்துகொள்ளும் சர்வதேசக் கண்காட்சி பெங்களூரில்

### - அமெரிக்கா உட்பட 25 நாடுகள் பங்கேற்பு

(பெங்களூரில்)

பெங்களூரில் வருகிற பெப்ரவரி மாதம் 9 ஆம் திகதி சர்வதேச விமானக் கண்காட்சி ஆரம்பமாகிறது. ஐந்து நாட்கள் நடைபெறும். இந்தக் கண்காட்சியில் அமெரிக்கா உட்பட 25 நாடுகள் கலந்து கொள்கின்றன.

இந்தியாவின் " தகவல் தொழில்நுட்ப தலை நகரம்" என வர்ணிக்கப்படும் பெங்களூரில் நடைபெறும் சர்வதேச விழாக்களில் விமானக் கண்காட்சியும் ஒன்றாகும். எலகங்காவில் உள்ள இந்திய விமானப் படை விமான நிலையத்தில் ஆண்டு தோறும் விமானக் கண்காட்சி நடந்து வருகிறது. பெப்ரவரி மாதம் இந்தக் கண்காட்சி நடைபெறுகிறது. பெப்ரவரி 9 ஆம் திகதி தொடங்கி 5 நாட்கள் கண்காட்சி நடை பெறுகிறது. இதில் இந்தியா, அமெரிக்கா, சீனா, எகிப்து. ஜப்பான், சுவீடன் , வியட்நாம், ஜேர்மனி உட்பட 25 நாடுகள் கலந்துகொள்கின்றன.

1998 ஆம் ஆண்டு பொக்ரான் அணுகுண்டுச் சோதனை காரணமாக இந்தியா மீது அமெரிக்கா பொருளாதாரத் தடை விதித்தது. பின்னர் அந்தத் தடை 2002 ஆம் ஆண்டு நீக்கப்பட்டது. தடை நடைமுறையில் இருந்த காலத்தில் விமானக் கண்காட்சியில் அமெரிக்கா கலந்துகொள்ளவில்லை. தற்போது நடைபெற விருக்கும் கண்காட்சியில் அமெரிக்காவின் "எப்-16" ரக போர் விமானங்கள் இடம்பெறுகின்றன.இது தவிர 25 நாடுகளைச் சேர்ந்த 78 விமான நிறுவனங்களின் தயாரிப்புகளும் கண்காட்சியில் வைக்கப் படுகின்றன.

இந்தியா சார்பில் உள்நாட்டுத் தயாரிப்பான "துருவ்" ஹெலி காப்டர்,"தேஜாஸ்" இலகு ரக விமானம் மற்றும் "ஜெட் டிரெய்னர்" ஆகியவை கண்காட்சியில் வைக்கப்படவுள்ளன. இந்திய பாதுகாப்பு அமைச்சகம் ஏற்பாடு செய்துள்ள இந்த விமானக் கண்காட்சி பற்றி எலகங்கா விமானப்படை கமாண்டன்ட் (ஏர்கம் மோடர்) எஸ்.பி.சிங் நேற்று நிருபர்களிடம் கூறியதாவது:

கண்காட்சியில் இந்திய விமானப்படையின் சுப்பர் சொனிக் ரக போர் விமானங்களான சுகோஸ் 30 எம்.கே.ஐ மிக்-29,மிராஜ்-2000, மிக்-21 பைசன், ஜாகுவார் (டிரெய்னர்)மிக் 35 ஆகிய விமானங்கள் பறக்கவிட்டுக் காண்பிக்கப்படும். இஸ்ரேல் நிறுவனம் தயாரித்த ஆள் இல்லாமல் பறக்கக் கூடிய நவீன விமானமும் கண்காட்சியில் இடம்பெறுகிறது.

# தேர்தல் விதிமுறைகளை மீறவில்லை தேர்தல் ஆணையாளரிடம் லல்லு சாட்சியம்


வாக்காளர்களுக்குப் பணம் கொடுத்ததாகக் கூறப்பட்ட புகார் குறித்து தலைமைத் தேர்தல் ஆணையாளர் டி.எஸ். கிருஷ்ணமூர்த்தியிடம் லல்லுப்பிரசாத் நேற்று முன்தினம் விளக்கம் அளித்தார்.

மத்திய ரெயில்வே மந்திரி லல்லுப் பிரசாத்தின் ராஷ்டிரீய ஜனதாதளம் கட்சியின் ஆட்சி நடைபெறும் பீகார் மாநிலத்தில் வருகிற பெப்ரவரி மாதம் சட்டசபைத் தேர்தல் நடைபெறவுள்ளது. இந்த நிலையில் சமீபத்தில் பாட்னா அருகே உள்ள பிட்டா கிராமத்தில் லல்லுப்பிரசாத்,"இனிப்பு வாங்கிச் சாப்பிடுங்கள்" என்று கூறி மக்களுக்குப் பணம் கொடுத்தார். இது தேர்தல் நடத்தை விதிமுறையை மீறிய செயல் என்றும், எனவே லல்லுப் பிரசாத் மீது தேர்தல் கமிஷன் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் பாரதிய ஜனதா வற்புறுத்தியது.

இதைத் தொடர்ந்து தேர்தல் ஆணைக்குழு பிறப்பித்த உத்தரவின்படி லல்லுப்பிரசாத் மீது பொலிஸ் நிலையத்தில் வழக்குப் பதிவுசெய்யப் பட்டது.

மேலும் தேர்தல் நடத்தை விதிமுறை மீறல் குற்றத்துக்காக உங்கள் ராஷ்டிரீய ஜனதாதளத்தின் அங்கீகாரத்தை ஏன் இரத்துச் செய்யக் கூடாது? என்று 24 ஆம் திகதி மாலை 5 மணிக்குள் விளக்கம் அளிக்க வேண்டும் என்றும் கோரி அவருக்குக் கடந்த திங்கட்கிழமை தேர்தல் ஆணைக்குழு மனு அனுப்பியது.

அதை ஏற்று லல்லுப்பிரசாத் நேற்று முன்தினம் டில்லியில் உள்ள தலைமை தேர்தல் ஆணைக்குழு அலுவலகத்திற்குச் சென்று தலைமை தேர்தல் ஆணையாளர் டி.எஸ்.கிருஷ்ணமூர்த்தியிடம் தனது பதில் மனுவைத் தாக்கல் செய்தார். பொதுமக்களுக்குப் பணம் கொடுத்தது பற்றிய புகார் குறித்து அப்போது அவர் விளக்கமும் அளித்தார்.



இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் வீரரான ஜடேஜாவின் செல்லப் பிடியில் சிக்கி நிற்கும் இவர் யார் தெரிகிறதா... பிற்காலத்தில் இவர் இந்திய கிரிக்கெட் அணியின் தலைவராகக் கூட வரலாம் பெயர் தேஜஸ்வி யாதவ் (வலது). ரயில்வே அமைச்சர் லல்லு பிரசாத் யாதவின் மகன் இவர் நேற்று முன்தினம் டில்லி- பெங்கால் அணிகள் மோதிய ரஞ்சி போட்டியைக் காண வந்திருந்தார்.

# தூஸ்ரா பந்து வீச்சு சர்ச்சைக்கு ஐ.சி.சி நிரந்தர தீர்வு காண வேண்டும்

பந்து ஏறியப்படுவதாக பொருள்படும் 'தூஸ்ரா' பந்து வீச்சு சர்ச்சைக்கு சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் நிரந்தரத் தீர்வு காண வேண்டும் என இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் கப்டன் கபில்தேவ் கருத்து தெரிவித்துள்ளார்.

ஜலந்தரில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற பார்ம் டிராக் ஹொக்கி போட்டியில் சிறப்பு விருந்தினராகப் பங்கேற்ற அவர் செய்தியாளர்களிடம் பேசியபோது மேற்கண்ட தகவலைத் தெரிவித்தார்.

ஒருவரது பந்து வீச்சு குறித்து சந்தேகம எழும்பட்சத்தில் அதற்கு உடனடியாகவும், இறுதியாகவும் தீர்வு காண வேண்டும். காலம் தாழ்த்தும் பட்சத்தில், அது அவ் வீரரின் மீது 2 ஆண்டுகளுக்கு ஒரு முறை கிளப்பப்படும் சர்ச்சை தொடர் கதையாகவே இருக்கும்.

இம் மாதிரியான சர்ச்சைகள் தொடராவண்ணம் ஐ.சி.சி செயற்பட்டால் அதற்கு பாராட்டு தெரிவிக்கும் முதல் நபராக நான் இருப்பேன். இப் பிரச்சினைக்கு விரைவாக தீர்வு காணும் பட்சத்திலேயே, கவலைகளை மறந்து விட்டு ஆட்டத்தில் அவ் வீரர்களால் கவனம் செலுத்த முடியும்.



வங்கதேச அணிக்கு எதிராக சிட்டகொங்கில் அண்மையில் முடிவுற்ற 2-ஆவது கிரிக்கெட் டெஸ்ட் போட்டியில் இந்திய சுழற்பந்து வீச்சாளர் ஹர்பஜன்சிங் பந்து வீச்சு குறித்து கள நடுவர்கள் சந்தேகம் எழுப்பினர். இதையடுத்து அவரது வீச்சை ஆய்வு செய்யுமாறு இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுசபைக்கு ஐ.சி.சி உத்தரவிட்டுள்ளது.

இது குறித்து கபிலிடம் கேட்டபோது, சம்பந்தப்பட்ட அமைப்பினர் சந்தேகம் எழுப்புவதில் தவறேதுமில்லை. ஆனால் அந்த சர்ச்சை குறித்து அனைவருடைய நலன் கருதி விரைவில் தீர்வுகாண வேண்டும் என்பதே எனது கருத்து.

எனது பந்து வீச்சு குறித்து சந்தேகம் எழுப்பினாலும் கவலைப்பட்டிருக்க மாட்டேன். எந்த பரிசோதனைக்கும் நானாகவே சென்றிருப்பேன் என்றார்.

# ஹர்பஜன்சிங்கின் தூஸ்ரா பந்து வீச்சு

## நாடு திரும்பியதும் பரிசோதனை



வங்கதேசப் பயணம் முடிந்து நாடு திரும்பியதும் ஹர்பஜனுக்கு 'தூஸ்ரா' சோதனை நடத்தப்படுகிறது

சுழற்பந்து வீச்சாளர் ஹர்பஜன் சிங் 'தூஸ்ரா' சிக்கலில் சிக்கியுள்ளார் 'தூஸ்ரா' முறையில் இவர் பந்து வீசும் போது சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் (ஐ.சி.சி) நிர்ணயித்துள்ள அளவை விட மிக அதிகமாக இவர் கை வளைவதாக புகார் கிளம்பியுள்ளது " ஆறு வாரத்திற்குள் தகுந்த பரிசோதனைகள் செய்து ஹர்பஜன் பந்து வீசும் முறை பற்றி அறிக்கை அளிக்க வேண்டும். தேவைப் பட்டால் பந்து வீசும் முறையை அவர் திருத்திக் கொள்ள வேண்டும்" என இந்திய கிரிக்கெட் சபைக்கு ஐ.சி.சி உத்தரவிட்டது. தற்போது வங்கதேசப் பயணத்தில் உள்ள ஹர்பஜன் நாடு திரும்பியதும், அவரது பந்து வீசும் முறை பற்றி 'பயோ-மெக்கானிக்' ஆய்வு செய்யப்படவுள்ளது..



# 2ஆவது ஒரு நாள் போட்டி டாக்காவில் இன்று



இந்தியா-வங்கதேசம் அணிகள் இடையேயான 2ஆவது ஒரு நாள் போட்டி டாக்காவில் இன்று பகல்-இரவாக நடக்கிறது.

இதற்காக இரு அணி வீரர்களும் டாக்காவில் தீவிர பயிற்சியில் ஈடுபட்டு வருகிறார்கள். பலவீனமான வங்கதேச அணி டெஸ்ட் தொடரில் மோசமாக விளையாடியது. ஆனால், முதல் ஒரு நாள் போட்டியில் வங்கதேசம் கடுமையாக போராடியே தோல்வி அடைந்தது.

இதனால், இன்றைய ஆட்டத்தில் அந்த அணி வீரர்கள் சவால் கொடுக்கும் வகையில் ஆடலாம். என்றாலும் இந்திய அணி இன்றைய ஆட்டத்தில் வென்று தொடரைக் கைப்பற்ற வாய்ப்புள்ளது.

முதல் ஒரு நாள் போட்டியில் இடம் பெறாத ஷேவாக், ஜாகீர்கான் ஆகியோர் இன்றைய ஆட்டத்தில் இடம் பெறுவார்கள். தமிழக வீரர் ஸ்ரீராமுக்கு வாய்ப்பு கிடைத்தும் அவர் அதைச் சரியாகப் பயன்படுத்திக் கொள்ளவில்லை. ஆனால் பந்து வீச்சில் முத்திரை பதித்தார் என்றாலும் அவர் நீக்கப்பட வாய்ப்பு உள்ளது. விக்கெட் காப்பாளர் தோனிக்கு மீண்டும் ஒரு வாய்ப்பு வழங்கப்படலாம்.


அகக்கர் அல்லது ஜோகீந்தர் நீக்கப்பட்டு ஜாகீர்கான் இடம் பெறலாம். ஒரு வேளை இருவரும் நீக்கப்பட்டால் ஜாகீர்கான் முரளி கார்த்திக் இடம் பெறுவார்கள். முதல் ஒரு நாள் போட்டியில் வங்களா தேச வீரர்களின் ஆட்டம் எதிர் பாராத வகையில் சிறப்பாக இருந்தது. இதனால் இன்றைய போட்டிக்கான வங்களாதேச அணியில் மாற்றம் எதுவும் இருக்காது.

இந்திய அணி இதுவரை 576 ஒரு நாள் போட்டியில் விளையாடி 269 இல் வெற்றி பெற்றது. 280 ஆட்டத்தில் தோற்றது. 3 ஆட்டம் 'டை' ஆனது 24 ஆட்டத்தில் முடிவு இல்லை. வங்களாதேசம் 99 ஆட்டத்தில் விளையாடி 5இல் வெற்றி பெற்றது. 92 ஆட்டத்தில் தோற்றது. 2 ஆட்டம் முடிவு இல்லை.




# பாக்.-அவுஸ்.மோதல் இன்று

அவுஸ்திரேலியா- பாகிஸ்தான் அணிகள் இடையேயான 2ஆவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டி மெல்போர்ன் நகரில் இன்று தொடங்குகிறது. முதல் டெஸ்டில் அந்த அணி 491 ஓட்டங்களில் வெற்றி பெற்று இருந்தது.இதனால் இன்றைய டெஸ்டில் வென்றால் தொடரை கைப்பற்றும். அந்த அணியின் தொடக்க வீரர் லாங்கர் காயம் அடைந்துள்ளார். இவரின் இடத்திற்கு கற்றீச் இணைக்கப்பட்டுள்ளார்.



# பாகிஸ்தான் அணி பலவீனமடைந்துள்ளது வெற்றிக்கான சாதகம் எமக்கே-பொண்டிங்

இன்று மெல்பேர்னில் ஆரம்பமாகும் பாகிஸ்தானுடனான இரண்டாவது டெஸ்ட் போட்டியின் போது முதலாவது போட்டியில் 491 ஓட்டங்களினால் தோல்வியைத் தழுவிய பாகிஸ்தானை அவுஸ்திரேலியா விழுங்கி விடும் என்று தெரிவிக்கப்படுகின்றது.

பாகிஸ்தான் அணி முன்னைய தோல்வியால் மிகுந்த மன அழுத்தத்துடன் காணப்படுவதாகக் கூறப்படுவதோடு பல விடயங்களில் தமது அணியை விட பாகிஸ்தான் பலவீனமடைந்துள்ளதாக அணித் தலைவர் ரிக்கி பொண்டிங் கூறியுள்ளார்.

யஸ்ரின் லாங்கர் விளையாட மாட்டார் என்றாலும் அவரின் இடத்தை சைமன் கற்றிச் நிரப்புவார். சொகைய்ப் அக்தரின் பந்து வீச்சும் பாகிஸ்தானுக்கு சிறு நம்பிக்கையை அளிக்கலாம்.

மெல்பேர்ன் மைதானம் ஏனைய மைதானங்களைப் போலன்றி வேகம் குறைந்தும் மேலெழும்புவது காணப்படும் ஆகையால் தமது அணிக்கு அது வாய்ப்பாக அமையும் என்று பொண்டிங் தெரிவித்துள்ளார். அத்துடன் நாம் நிதானத்துடன் செயற்பட்டால் பாகிஸ்தானின் எந்த அச்சுறுத்தலுக்கும் அஞ்சப்போவதில்லை என்றார்.



# சிறலங்கா அணியில் ஏற்பட்ட திடீர் மாற்றம் நியூசிலாந்து அணிக்கு வாய்ப்பாக அமையும்



சிறிலங்கா கிரிக்கெட் அணியில் எற்பட்ட திடீர் மாற்றத்தை நியூசிலாந்து வீரர்கள் சாதகமாகப் பயன்படுத்திகொள்ளலாம் என நம்பிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

இன்று ஒக்லாந்தில் நடைபெறும் முதலாவது ஒரு நாள் போட்டியில் நுவான் சொய்சா விரலில் காயமேற்பட்டதால் அவரின் இடத்துக்கு லசித மாலிங்க நியமிக்கப்பட்டுள்ளார். எனினும் சமிந்த வாசின் பந்து வீச்சுக்கு முகம் கொடுக்க துடுப்பாட்ட வீரர்கள் தயார்படுத்தப் பட்டிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது. அதே போன்று சிறிலங்காவின் துடுப்பாட்டத்தைக் கட்டுப்படுத்த நியூசிலாந்து சுழல் பந்து வீச்சாளரான ஜேம்ஸ் பிராங்ளின் வரவழைக்கப்பட்டுள்ளார்.

2003 ஆம் ஆண்டு உலகக் கிண்ண போட்டியின் போது நதன் ஆஸ்லே ஓட்டமெதுவும் பெறாமல் ரன்அவுட் முறையில் ஆட்டமிழந்தார் இப் போட்டியில் திறமையை வெளிக்காட்டவிருக்கிறார். தான் நிலைத்து நின்று ஆடி தனது நிலையில் முன்னேற்றங்காண எண்ணியிருப்பதாக ஹெரால்ட் என்ற சஞ்சிகையிடம் தெரிவித்துள்ளார்.

நுவான் சொய்சாவின் பங்கேற்பில்லாத படியால் வாசுக்கு இது பொறுப்பான ஆட்டமாக இருக்கும். அவருடைய முயற்சி வீண் போகாது அவர் பார்த்துக் கொள்வார். அவர் 23 போட்டிகளில் 25 விக்கெட்டுக்களைப் பெற்றுள்ளார். சராசரி 27.40 ஆடுகளங்கள் பந்து வீச்சாளர்களுக்கு சாதகமானதாக இருக்கும் என்று அவர் குறிப்பிட்டார்.

நுவான் சொய்சா நேப்பியரில் புதனன்று நடைபெற்ற பயிற்சிப் போட்டியின் போது காயமடைந்தமை குறிப்பிடத்தக்கது.




கட்டாரில் உள்ள தேடாஹாவில் 'அரேபிய கால்பந்து சம்பியன் ஷிப்' போட்டிகள் நடந்து வருகின்றன. இதில் பஹ்ரைன் 3-1 என்ற கோல் கணக்கில் குவைத் அணியை வீழ்த்தியது. பஹ்ரைன் வீரர் டேஜ்நாசர் (இடது) கோல் முயற்சியை தடுக்கிறார். குவைத் கோல்கீப்பர் ஷிகாப் அகமது.

# தொடர் வெற்றிக்கு தயாராகிறது இங்கிலாந்து கிரிக்கெட் அணி

டெஸ்ட் போட்டிகளில் தொடர்ச்சியாக ஒன்பதாவது வெற்றிக்கு இங்கிலாந்து அணி தயாராகிறது. ஐந்து போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் பங்கேற்க இங்கிலாந்து கிரிக்கெட் அணி தென் ஆபிரிக்கா சென்றுள்ளது. போர்ட் எலிசபேத்தில் நடந்த முதல் டெஸ்டை ஏழு விக்கெட் வித்தியாசத்தில் வென்றது. டெஸ்ட் போட்டிகளில் வரிசையாக அந்த அணி பெறும் எட்டாவது வெற்றி அது. இங்கிலாந்து அணிக்கு இது சாதனை இரு அணிகளுக்கிடையிலான இரண்டாவது டெஸ்ட் டர்பன் நகரில் இன்று தொடங்குகின்றது. இந்தப் போட்டியிலும் வென்று வெற்றி எண்ணிக்கையை ஒன்பதாக உயர்த்த இங்கிலாந்து திட்டமிட்டுள்ளது.

# வவுனியா மாவட்ட விளையாட்டு வீரர்கள் கௌரவிப்பு நிகழ்வு

வவுனியா மாவட்ட விளையாட்டு வீரர்களைக் கௌரவிக்கும் 'விளையாட்டு வர்ண இரவு' நாளை திங்கட்கிழமை மாலை 6.30 மணிக்கு வவுனியா அரச செயலக வளாகத்தில் நடை பெறவுள்ளது.


கடந்த 2001ஆம் ஆண்டு முதல் 2004ஆம் ஆண்டு வரை நடைபெற்ற தேசிய விளையாட்டு விழாவிலும், மாகாண விளையாட்டு விழாவிலும் பங்குபற்றி சாதனை படைத்த 118 வீர வீராங்கனைகள் இவ்விளையாட்டு வர்ண இரவு நிகழ்வில் கௌரவிக்கப்படவுள்ளனர்.

அத்துடன் வவுனியா மாவட்டத்தில் விளையாட்டுத்துறையை அபிவிருத்தி செய்ய அரும்பாடுபட்ட 18 பேர் நினைவுப் பரிசு வழங்கிக் கௌரவிக்கப்படவுள்ளனர்.

வவுனியா மாவட்ட விளையாட்டுத்துறையின் அபிவிருத்தியை வெளிப்படுத்தும் வகையிலான மலர் வெளியீடும், வவுனியா மாவட்ட விளையாட்டுத்துறையின் வளர்ச்சிக்கான நிதியம் ஆரம்பித்தலும் இந்நிகழ்வில் நடைபெறவுள்ளது.

இவ்விளையாட்டு வர்ண இரவு நிகழ்வில் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், சிவசக்தி ஆனந்தன், வினோநோகராதலிங்கம், சதாசிவம் கனகரட்ணம், சிவநாதன் கிஷோர், வவுனியா அரச அதிபர் க. கணேஷ் விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகள் உட்பட பலர் கலந்து கொள்ளவுள்ளனர். (10)

## சிந்தனைக்கு



அறப்போரிலும் சரி ஆயுதப் போரிலும் சரி,எமது விடுதலைப் போர் உலக சாதனைகளைப் படைத்து வருகின்றது; மனித ஈகையின் சிகரத்தை எட்டியிருக்கின்றது.

தமிழீழ தேசியத் தலைவர்.

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ்.சாலை,கிளிநொச்சி. 26-12-2004
தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948
மின் அஞ்சல் Daily@ eezhanatham. com

## காலதாமதம் ஓர் தந்திரோபாயம்!

இவ்வாரத்தின் தொடக்கத்தில் சிறிலங்கா அரசாங்கத்தினால் விடுதலைப்புலிகளுக்கு அனுப்பப்பட்டிருந்த புதிய நிகழ்ச்சி நிரல் புலிகளினால் நிராகரிக்கப்பட்டுவிட்டது. இது ஒன்று ஆச்சரியத்திற்குரியதல்ல. ஏனெனில், சிறிலங்கா அரசாங்கம் முன்வைத்த இந் நிகழ்ச்சி நிரல் தீர்விற்கானதல்ல என்பது ஏற்கனவே தெரிந்த தொன்றே ஆகும்.

சிறிலங்கா ஆட்சியாளர்கள் – குறிப்பாகச் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க சமாதானப் பேச்சுவார்த்தைகள் மீது நம்பிக்கை கொண்டவராய், இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் வகையில் நடவடிக்கைகளை மேற்கொண்டவராக இல்லை. ஒவ்வொரு வேளையிலும், குறிப்பாக உள்நாட்டில் இருந்தும், வெளிநாடுகளில் இருந்தும் வரும் அரசியல், பொருளாதார அழுத்தங்கள் காரணமாகவே சனாதிபதி சமாதானப் பேச்சுவார்த்தைகள் குறித்து அறிவிப்புக்கள் சிலவற்றை வெளியிடுவது வழமையாகும்.

சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தற்போதைய ஆட்சிக் காலத்தில் மட்டுமல்ல, கடந்த ஆட்சியின்போதும் பேச்சுவார்த்தைகள குறித்துப் பேசினரே ஒழிய பேச்சுவார்த்தையை முன்னெடுப்பதற்கான நடவடிக்கைகளை அவர் மேற்கொண்டதில்லை. மாறாக, ஒவ்வொரு தடவையும் அழுத்தம் வரும்போதே பேச்சுவார்த்தை குறித்த அறிவிப்புக்களை வெளியிடுவது வழமையாகும்.

கடந்த ஆட்சிக் காலத்தின் பிற்பகுதியில் – இராணுவ ரீதியில் மோசமான தோல்விகளைச் சந்தித்தபோது சர்வதேச நாடுகளின் அனுசரணையுடன் – குறிப்பாக, நோர்வேயின் அனுசரணையுடன் பேச்சுவார்த்தைக்குத் தயார் என அறிவிப்புச் செய்தார். நோர்வே அரசையும் ஏற்பாட்டாளராகச் செயற்படுமாறு அழைத்தார்.

ஆனால், நோர்வே அரசு தனது பணியைத் தொடங்கியபோது சனாதிபதி சந்திரிகா அதற்கு தனது பூரண ஒத்துழைப்பை வழங்கவில்லை. மாறாக, அவரது முக்கிய அமைச்சர்களே நோர்வே தரப்பை அவமானப்படுத்தும் வகையிலேயே நடந்து கொண்டனர். சனாதிபதி சந்திரிகா கூட சில சமயங்களில் மதிப்பளித்து நடந்து கொண்டதாக இல்லை.

இதன் பின்னர் ஆட்சி அதிகாரம் கைமாறி மீண்டும் அதிகாரத்தைக் கைப்பற்றியபோதும் சனாதிபதி சந்திரிகாவின் நடவடிக்கைகளில் மாற்றம் தென்பட்டதாக இல்லை. ஐ.தே.கட்சி அரசாங்கம் நடாத்திய சமாதானப் பேச்சுவார்த்தைகளை தொடரப் போவதாக அறிவிப்புச் செய்தாலும், சமாதானப் பேச்சுவார்த்தைகள் தொடரப்படவும் இல்லை. அதனை முன்னேற்றுவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படவும் இல்லை.

மாறாகச் சமாதானப் பேச்சுவார்த்தைகள் முன்னேற்றம்காணாத வகையில் முட்டுக்கட்டைகள் போடப்பட்டே வந்தன. குறிப்பாக, சமாதானப் பேச்சுவார்த்தையின் அவசியம் பற்றி சர்வதேச ரீதியிலான அழுத்தங்கள் அன்றி சர்வதேச ரீதியிலான எதிர்பார்க்கை ஏற்பட்டபோதெல்லாம் அரசாங்கம் பேச்சுவார்த்தைக்குத் தயார் என்பது போன்று கட்டிக்கொள்ளவும் – அதேசமயம் புதிய புதிய நிபந்தனைகளை விதிக்கவும் செய்தது.

இம்முறை ஆட்சிப் பொறுப்பேற்றதும் விடுதலைப்புலிகள் இயக்கம் முன்வைத்துள்ள இடைக்கால தன்னாட்சி அதிகார சபை தொடர்பான நகல் திட்டத்தின் அடிப்படையில் பேசமுடியாது. இறுதித்தீர்வு பற்றியே முதலில் பேசப்பட வேண்டும் என்றது. இதனை அடிப்படையாகக் கொண்டு சில மாதங்கள் பேச்சுவார்த்தையை இழுத்தடித்தது.

இதன் பின்னர் இறுதித் தீர்வுடன் இடைக்கால நிர்வாகம் பற்றியும் பேச அரசாங்கம் தயாராக உள்ளது எனத் தெரிவித்தது. இந்த வகையில் இழுத்தடிப்பு நடந்து கொண்டிருக்கையில், அழுத்தங்கள் அதிகரித்த வேளையில் தாம் முனவைக்கும் மாற்று யோசனைகள் அடிப்படையில் பேச்சுவார்த்தையை ஆரம்பிக்க அரசாங்கம் தயார் எனக் கூறப்பட்டது. அதேவேளை, அரசாங்கம் தேசிய நல்லிணக்க சபை ஒன்றை உருவாக்கி அதன் முடிவுகளின்படி பேச்சுவார்த்தைக்கான திட்டத்தைத் தயாரிக்கப்போவதாகக் கூறியது.

இத்தகைய போக்கில் இறுதியாக தெரிவிக்கப்பட்டதே பேச்சுவார்த்தைக்கான புதிய நிகழ்ச்சி நிரலாகும். சர்வதேச நாடுகள், குறிப்பாகச் சிறிலங்காவிற்கு உதவி வழங்கும் முக்கிய நாடுகள் ஒன்றாக இணைந்து சமாதானப் பேச்சுவார்த்தைகள் தொடர்பாக அரசாங்கத்தின் நிலைப்பாடு வெளிப்படுத்த வேண்டும் எனக் கோரியபோதே இப்புதிய நிகழ்ச்சி நிரலை அரசாங்கம் அவசரமாக எந்தவித முன்னறிவிப்பும் இன்றி அனுப்பி வைத்தது.

அரசாங்கம் இந்நிகழ்ச்சி புதிய நிரலை அனுப்பிவைத்தபோதே இது உருப்படியான ஆலோசனை எதையும் கொண்டதாக இருக்கமாட்டாது என்பது வெளிப்பட்டதோடு, அரசாங்கம் இறுக்கமான சூழ்நிலையில் இருந்துவிடுபட முற்பட்டுள்ளது என்பதும் அனைவராலும் புரியப்பட்டதொன்றாகவே இருந்தது. ஏனெனில் அனுப்பி வைக்கப்பட்ட நிகழ்ச்சி நிரலுக்கு அரசாங்கமே முன்னுரிமை கொடுக்கவில்லை.

ஆகையினால், இந்நிகழ்ச்சி நிரலானது புலிகளால் ஏற்றுக் கொள்ளத்தக்கதொன்றாக அமைந்ததொன்று என எதிர்பார்க்கத் தக்கதல்ல. அதாவது, பேச்சுவார்த்தை தொடர்பான நிகழ்ச்சி நிரல் ஒன்று தயாரிக்கப்பட வேண்டுமானால், அது தெளிவானதாகவும், திட்டவட்டமான வரையறைகளைக் கொண்டதாகவும் இருத்தல் அவசியமானதாகும். இதை விடுத்து பேச்சுவார்த்தைகளைத் தாமதப்படுத்துவதற்கெனத் தயாரிக்கப்பட்ட நிகழ்ச்சி நிரலை எவ்வாறு ஏற்றுக்கொள்ள முடியும்?

### தொலைத் தொடர்பு இணைப்பு தொடர்பில்

# ஜே.வி.பி யின் எதிர்ப்பையும் மீறி சீன நிறுவனத்துடன் அரசு ஒப்பந்தம்

(கொழும்பு)

அமைச்சரவையில் ஜே.வி.பி எதிர்த்தபோதும் சீன நிறுவனத்துடன் இணைந்து இலங்கையில் 10 இலட்சம் தொலைபேசி இணைப்புகளை பொருத்த இணக்கம தெரிவிக்கப்பட்டுள்ளது இதன்படி நிரந்தர தொலைபேசி இணைப்புகள் பொருத்தப் படவுள்ளன. கடந்த 13 ஆம் திகதி இது தொடர்பில் தாம் குறிப்பிட்ட சீன நிறுவனத்துடன் பேச்சு நடத்தியுள்ளதாக அஞ்சல் தொலைத்தொடர்புகள் துறை அமைசசா் டி.எம். ஜெயரட்ன தெரிவித்தார்.எனினும் இந்தத் திட்டத்திற்கு அமைச்சரவை அங்கீகாரம் பெற கடந்த அமைச்சரவையில் முயற்சி மேற்கொள்ளப்பட்ட போதும் அதற்கு ஜே.வி.பி தமது அதிருப்தியை தெரிவித்திருந்த நிலையில் அமைச்சரவை அங்கீகாரம் அந்தத் திட்டத்திற்கு கிடைக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது (32)

# கட்டுநாயக்கா விமான நிலையத்துக்கு எரிபொருள் எடுத்துச் செல்கையில் மோசடி

இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்திலிருந்து கட்டுநாயக்கா விமானநிலையம் வரை கொண்டு செல்லப்படும் எரிபொருட்களை இடையில் மோசடி செய்யும் நடவடிக்கை தொடர்பாக தகவல் கிடைத்துள்ளதாக வெல்லம் பிட்டிய பொலிசார் தெரிவித்ததையடுத்து சந்தேக நபர்கள் இருவர் பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட இருவரும இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்தில் கூலிக்காக வேலை செய்பவர்கள் ஆவார்.

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான ஆறரை இலட்சம் பெறுமதியான எரிபொருள் பவுசரில் இருந்துளளது.

சுற்றிவளைப்பை மேற்கொள்ளும போது 100 லீற்றருக்கும் அதிகமான எரிபொருள் பவுசரில் இருந்து வெளியேற்றப்பட்டதாக பொலிசார் தெரிவித்துள்ளனர்.

# தற்போது ஏற்பட்டுள்ள மா தட்டுப்பாடு பிறிமா நிறுவனத்தின் திட்டமிட்ட சதி

### அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள கோதுமை மா தட்டுப்பாடானது பிறிமா நிறுவனத்தின் திட்டமிட்ட சதி நடவடிக்கையே என நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே கூறியுள்ளார்.

தற்போது ஏற்பட்டுள்ள மா தட்டுப்பாட்டை நீக்குவதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன.அடுத்த ஆண்டு சனவரி மாதத்தின் முதல் வாரத்திற்கு முன்பாக வெளிநாடுகளில் இருந்து மாவை இறக்குமதிசெய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன.

தற்போது பிறிமா நிறுவனம் விற்பனை செய்யும் மாவிற்கு அரசாங்கம் மானியங்களை வழங்கிவருகின்றது.இதன் மூலம் கிலோ ஒன்றிற்கு 7 ரூபா பிறிமா நிறுவனத்திற்கு கிடைத்து வருகின்றது.ஆனால் அடுத்த ஆண்டு முதல் இறக்குமதி செய்யப்படவுள்ள மாவிற்கு அரசாங்கமானியம் வழங்கப்படாது. ஆனால் பிறிமா நிறுவனம் விற்பனை செய்யும் அதே விலைக்கு மாவினை விற்பனை செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள் ளது.கடந்த கால ஆட்சியில் ஐக்கிய தேசிய கட்சி பிறிமா நிறுவனத்துடன் செய்து கொண்ட ஒப்பந்தங்கள் காரணமாக தற்போதைய அரசாங்கம பெரும் நெருக்கடிகளை சந்தித்து வருகின்றது என மேலும் கூறினார். (32)

# நௌபரின் ஒப்புதல் வாக்குமூல அடிப்படையில் பல பொலிஸ் உயரதிகாரிகள் மீது விசாரணை ஆரம்பம்

போதைப் பொருள் கடத்தல் காரரான மொகமட்நௌபரினால் வெளியிடப்பட்ட ஒப்புதல் வாக்கு மூலங்களின் அடிப்படையில் பல சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிகள் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்கள்.

மேல் நீதிமன்ற நீதிபதி சரத் அம்பேபிட்டியவின் படுகொலை சம்பந்தமாக நௌபர் தற்பொழுது தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ளார்.

இந்தப் பொலிஸ் அதிகாரிகள் மீது விசாரணைகளை மேற்கொள்ளவதற்காக விசேட விசாரணைப் பிரிவென்று ஏற்படுத்தப் பட்டுள்ளதாக பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

மேல் நீதி மன்றத்திடம் இருந்து பெறபட்ட விசேட அனுமதியை அடுத்து நௌபர்அழித்த ஒப்புதல் வாக்கு மூலம் காரணமாக அவர் மரண அச்சுறுத்தலை எதிர்நோக்கியுள்ளார்.

இதற்காக அவரது பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. போதைப் பொருள் வர்த்தகர் நௌ பரிடமிருந்து இலஞ்சத்தையும் வேறு சலுகைகளையும் பெற்று வந்த சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிகளுக்கு எதிராக நௌபர் தெரிவித்த குற்றச் சாட்டுக்களையடுத்தே இவர் மீது மரண அச்சுறுத்தல் விடுக்கப் பட்டுள்ளது.

நௌபரின் ஒப்புதல் வாக்கு மூலத்தில் தெரிவிக்கப்பட்ட குற்றச் சாட்டுக்களையடுத்து பொலிஸ் அதிகாரிகளுக்கு கெதிராக பொலிஸ்மா அதிபர் சந்திரா பெர்னாண்டோவின் உத்தரவின் பெயரில் விசாரணைகள் ஆரம்பிக் கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப் படுகின்றது.

# அரசியலமைப்பை மாற்றுவது நோக்கமல்ல சமாதானத்தை முன்னெடுப்பதே தனது நோக்கமாம்

### சந்திரிகா கூறுகிறார்

அரசியலமைப்பை மாற்றுவதோ அல்லது சர்வஜன வாக்கெடுப்பை நடத்துவதோ தமது நோக்கமல்ல. சமாதான முயற் சிகளை முன்னெடுத்து செல்வதே தமது நோக்கம் என சனாதிபதி தெரிவித்துள்ளார். இறுதியாக இடம்பெற்ற சிலங்கா சுதந்திரக் கட்சி பாராளுமன்ற உறுப்பினர் கூட்டத்தின் போது அவர் இதனை முக்கிய பிரதான ஆளும் கட்சி உறுப்பினரிடம் தெரிவித்ததாக தகவல்கள் வெளியாகியுள்ளன. பெரும்பாலானோர் சர்வஜன வாக்கெடுப்பு மற்றும் அரசியலமைப்பு மாற்றங்களை தாம் மேற்கொள்வதை எதிர்பார்த்திருக் கிறார்கள். எனினும் அவற்றை பின் தள்ளி வைத்து விட்டு எவ்வாறு சமாதான முயற்சிகளை முன்னெடுப்பது என்றும் இதன்போது ஜே.வி.பியின் எதிர்ப்பை எவ்வாறு சமாளிப்பது என தாம் சிந்தித்து வருவதாகவும் சனாதிபதி குறிப்பிட்டுள்ளார்.

ஜே.வி.பி தமது நகர்வுக்கு எதிர்ப்பை வெளியிடும் நிலையில் 22 பேரைக்கொண்ட தமிழ்த்தேசிய கூட்டமைப்பு மற்றும் ஐக்கிய தேசியக் கட்சியின் ஒரு பிரிவினர் மற்றும் ஜே.வி.பியின் சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிக்க வேண்டும் என்ற கருத்தை கொண்டிருப்போர் ஆகியோரின் உதவிகளை பெற தாம் முயற்சிப்பதாகவும் அவர் விளக்கமளித்துள்ளதாக கொழும்புத் தகவல்கள் கூறுகின்றன.

எனவே தமது ஆட்சிக்கும் அதேநேரம் சமாதான முயற்சிக்கும் பாதகம் வரக்கூடிய நிலையை தவிர்க்க முடியும் என சனாதிபதி நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

# எம்மீது போர் திணிக்கப்படுமானால் அதனைஎதிர்கொள்ளத்தயார்

## வவுனியா மாவட்ட மாணவர் அமைப்புப் பொறுப்பாளர்

இலங்கை அரசாங்கம் போருக்கான சகல ஏற்பாடுகளை செய்து வருகின்றது எம்மீது போர் திணிக்கப்படுமானால் அதனை எதிர்கொள்வதற்கு புலிகள் தயாராக உள்ளனர். இவ்வாறு தமிழீழ மாணவர் அமைப்பின் வவுனியா மாவட்ட தலைவர் சுபாஸ் இன்று மாலை 3 மணிக்கு வவுனியா முத்தையா மண்டபத்தில் இடம் பெற்ற அனைத்து பல்கலை கழகங்களில் அபிவிருத்தி சங்கத்தின் வவுனியா கிளையால் வெளியீடு செய்யப்பட்ட வெண் சங்கு புத்தகத்தின் வெளியீட்டில் சிறப்புரையாற்றும் போது தெரிவித்தார்.

இன்றைய சூழல் எல்லோருக்குமே தெரியும் உங்களுக்கு ஒரு ஐயப்பாடு இருக்கின்றது. அதாவது விடுதலைப்புலிகள் போரை ஆரம்பிக்க போகிறார்களா என்று எங்களை பொருத்த அளவில் தொடர்ந்தும் நாங்கள் சமாதானத்திற்கான நிலையில் இருக்கின்றோம் ஆனால் இலங்கை அரசு இன்று போருக்கான அனைத்து ஆயத்தங்களையும் எல்லா வழிகளிலும் தயார்ப்படுத்திக்கொண்டு உள்ளது ஆயுதங்களாக இருந்தாலும் சரி அல்லது இராணுவ பயிற்சியாக இருந்தாலும் சரி எந்தவகையிலையுமே போரை மேற்கொள்ளுவதற்கான தயார் படுத்தலில் முனைப்பாக இருக்கின்றது. நாங்கள் சமாதானத்திற்காக உறுதியாக நிற்கின்றோம்.எங்களின் மக்களின் வாழ்வுரிமைக்காக நிற்கின்றோம். அதை பல சந்தர்ப்பங்களில் பல போராளிகளை இழந்தும் கூட வழியுறுத்தி நிற்கின்றோம் ஆகவே சமாதானத்தினை விடுத்து போர் ஒன்று எங்கள் மீது திணிக்கப்பட்டாலும் அரசு சமாதானத்தின் பாதையில் இருந்து விலகி எங்கள் மீது போர் திணிக்கப்பட்டாலோ எங்கள் மக்களை பாதுகாக்கவேண்டிய பொறுப்பும் கடமையும் எங்களிடம் உள்ளது நாங்களாக போருக்கு போகமாட்டோம் எங்கள் மீது போர் திணிக்கப்பட்டால் இறுதியான போராகத்தான் இருக்கும். நாங்கள் எல்லாவகையிலும் எல்லா நிலையிலும் பலமாக தான் இருக்கின்றோம். அந்த நிலையில் இருந்து கொண்டுதான் இன்று பேச்சுவார்த்தைகள் நடந்து கொண்டு இருக்கின்றது.அரசாங்கம் அதை தவறாக புரிந்து கொண்டு எங்கள் மீது போர் திணித்தால் அதனை எதிர் கொண்டு எமது பிரதேசத்ததையும் மக்களையும் மீட்பதற்கு தயாராகவே உள்ளோம் இவ்வாறு சுபாஸ் தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் வன்னி பாராளுமன்ற உறுப்பினர் சிவநாதன் கிஷோர் நூலை வெளியீட்டுவைக்க முதல் பிரதியினை வவுனியா விபுலாநந்த கல்லூரியின் அதிபர் ஏ.ஜெயதரன் பெற்றுக் கொண்டார் அத்துடன் அனைத்து பல்கலைக்கழகங்களின் பிரதிநிதிகளும், மாணவர்களும் கலந்து கொண்டனர். நிகழ்வு அனைத்து பல்கலைக்கழகங்களின் மாணவ அபிவிருத்தி சங்க பிரதிநிதி ச.சஞ்ஜீபன் தலைமையில் நடை பெற்றது. (21)

# இடம்பெயர்ந்த மக்களை மீளக்குடியேற்றவே புலிகள் இ.த.அ சபையை கோருகின்றனர்

## அமைச்சர் டி. யு.குணசேகர

விடுதலைப் புலிகளினால் முன் வைக்கப்பட்ட இடைக்காலத் தன்னாட்சி யோசனை அடிப்படையில் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்பட வேண்டும். இரு பகுதியினரும் பேச்சுவார்த்தை மேசையில் தமது வேற்றுமைகளை பேச்சுவார்த்தை மேசையில் பேசித் தீர்க்க முயற்சி செய்ய வேண்டுமென ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் அரசியல் யாப்பு மறுசீரமைப்பு அமைச்சர் டி.யு.குணசேகர கண்டியில் லங்கா சமசமாயக் கட்சியின் முன்னாள் தலைவர் என்.எம் பெரே ராலின் 100ஆவது பிறந்தநாள் நிகழ்வில் உரையாற்றும் போதே கூறியுள்ளார். இவர் இலங்கை கொம்யூனிஸ்ட் கட்சியின் செயலாளரும் பல தொழிற்சங்கங்களின் தலைவருமாவார். தேசியப் பிரச்சினைக்கு பேச்சுவார்த்தைகளில் தீர்வு காண வேண்டும் என்றும் குறிப்பிட்டார்.அவர் மேலும் தெரிவிக்கையில், விடுதலைப்புலிகள் இடைக்காலத் தன்னாட்சி யோசனையை போரினால் இடம் பெயர்ந்த மக்களின் மீள் குடியமர்விற்கே வலியுறுத்துகின்றனர். அவர்களுடைய கோரிக்கைகள் முழுமையாக ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும். அல்லது பேச்சுவார்த்தை மேசையினூடு தீர்க்கப்பட வேண்டும். அரசாங்கம் அதன் தீர்மானங்களை முன் வைக்க முடியும். இவை உறுதியானவையல்ல. ஒவ்வொரு பகுதியினரும் மற்றப் பகுதியினரின் தனியான தீர்மானங்களை ஏற்க வேண்டிய கடமை இல்லை. சகல முரண்பாடுகளும் பேச்சுவார்த்தை மேசையில் தீர்க்கப்படும் என நாம் நம்புகின்றோம் எனவும் கூறினார். நாங்கள் தனிச் சிங்களச் சட்டத்தையும் எதிர்த்தோம் . 17 வருட காலமாக தமிழ் மொழியும் அரசகரும மொழியாக இருக்கிறது. அதில் எந்த வித மாற்றமுமில்லை இது தொடர்பாகச் சந்தேகம் தேவையில்லை. இதுவும் தற்போதைய சமாதான முன்னெடுப்புக்களின் தடைக்குக் காரணமாக உள்ளது எனவும் தெரிவித்துள்ளார்.

# நோர்வே வெளியுறவு அமைச்சர்களுடன் கதிர்காமர் கலந்துரையாடல்

வெளிநாட்டமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் நோர்வே வெளியுறவுத்துறை அமைச்சர் ஜான் பீட்டர்ஸனுடன் கலந்துரையாடியுள்ளார். இந்தக் கலந்துரையாடல் தொலைபேசி மூலமாகவே இடம் பெற்றுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது

தமிழீழ விடுதலைப்புலிகள் அரசாங்கத்தின் செய்தி தொடர்பில் நேற்று அறிவித்த பதிலை அடுத்தே இந்தக் கலந்துரையாடல் இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. எனினும் இதில் பேசப்பட்ட விடயங்கள் எவையும் வெளியாகவில்லை.

# அதிபர்களுக்கான கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

யாழ்.தென்மராட்சி பிரதேசத்திலுள்ள பாடசாலைகளின் அதிபர்களுக்கான முக்கிய பயிற்சிக் கருத்தரங்கு 28 ஆம் திகதி காலை 9 மணிக்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரி மண்டபத்தில் இடம் பெறவுள்ளது.

இதில் பாடசாலை. மாணவர்களை வழிநடத்தல், அவர்களுக்குள்ள உரிமைகளைப் பேணுதல், பாடசாலை மாணவர்களின் அறிவு விருத்திகளைப் பெருக்குதல் என்பன வற்றிற்கான வழிகாட்டல்கள் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (33)

### தமிழர்...

புறப்பட்டு வாருங்கள்! வீர சுதந்திர முழக்கமிடுவோம்! உலகிற் எம் இனத்தின் ஒன்றுபட்ட குரலாக உரிமைக்குரலை வெளிப்படுத்திக் காட்டுவோம். எமது இடைக்கால தன்னாட்சி அதிகாரசபைக்கான பேச்சு உடனே தொடங்க வேண்டும். அதன் மூலம் எமது உரிமைகள் கிடைக்கப்பெறவேண்டும். அதனால் நாம்,எமது நிலத்தில் சுதந்திரமாக வாழவேண்டும் இதற்காக வடமராட்சி மக்களாகிய நாம் 29.12.2004 பருத்தித்துறை நகர பஸ்நிலையத்தில் ஒன்று சேருவோம். வீர சுதந்திர முழக்கமிடுவோம் எனதெரிவிக்கப்பட்டுள்ளது. (27)

### வவு....

நிகழ்வுகளை நடத்துவதற்கு கட்டப்பட்ட இந்தக் கட்டடத்தில் இராணுவம் தொடர்ந்து நிலை கொண்டிருப்பதன் காரணமாக வவுனியா மாவட்டத்திற்குரிய கலை கலாசார நிகழ்வுகளை நடத்துவதில் பாரிய பிரச்சினையாக இருப்பதாக கலைஞர்கள் தெரிவிக்கின்றனர் அத்துடன் வவுனியாவின் பிரதானமான குடியிருப்பு பகுதியில் தொடர்ந்தும் இந்த இராணுவ முகாம் இருப்பதன் காரணமாக பிரதேச வாசிகளும் பல்வேறு நெருக்கடிகளுக்கு முகம் கொடுத்து வருவதாகவும் தெரிவிக்கின்றனர். (21)

### வடக்கு...

வேளையில் படைப்பலப்படுத்தல் நடவடிக்கைகளை நோக்கமாகக் கொண்டு இவரது விஜயம் அமைவதாலேயே இவ்வாறான எதிர்ப்புக்கள் தெரிவிக்கப்படவுள்ளது.

அத்துடன் யுத்த அனர்த்தங்களால் கடந்த காலங்களில் பாதிக்கப்பட்ட மக்களுக்கான தேவைகளை மாகாண சபை உரிய தருணங்களில் பூர்த்தி செய்யத் தவறிவிட்டமை குறித்தும் விசனம் தெரிவிக்கப்பட்டுள்ளது. (33)

### கிழக்கில்...

வரும் முன்னாள் மாநகரசபை சீ.வி.கே.சிவஞானம் தெரிவித்தார்.

இதேவேளை கிழக்கு மக்களிற்கான உதவிகளை வழங்குவதில் குடாநாட்டு மக்கள் காட்டிய ஆர்வம் பெரும் மனமகிழ்ச்சியினை ஏற்படுத்தியிருப்பதாக ஏற்பாட்டுக்குழு வட்டாரங்கள் உவகை வெளியிட்டன. (24)

# பளையில் மக்கள் போராட்டத்தை முன்னெடுக்க குழு அமைப்பு

சமாதானப் பேச்சு வார்த்தையை தொடரும்படி சிறிலங்கா அரசிற்கு அழுத்தம் கொடுக்கும் வகையில் எதிர்வரும் 28ஆம் திகதி பச்சிலைப்பள்ளி பிரதேசத்தில் பளைகோட்டத்தில் நடைபெற இருக்கின்ற மாபெரும் மக்கள் சுழச்சி போராட்டத்தில் முன்னெடுப்புக்கள் சம்பந்தமாக மக்கள் போராட்ட முன்னெடுப்பு குழு தெரிவு ஒன்று இன்று காலை 11 மணியளவில் பளை கோட்ட தேசிய எழுச்சிப்பேரவை செயலாளர் தலைமையில் பளை பொதுமண்டபத்தில் நடைபெற்றது. இதில் தலைவராக நா.பூபாலசிங்கம் உபதலைவராக மா.குமாரவேல், செயலாளராக ஆ.பாலசிங்கம் ஆகியோர் உட்பட 8 உறுப்பினர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர் (11)

# திருநாவற் குளம் பகுதியில் இரு குழுக்களிடையே மோதல்

(செட்டிகுளம்)

வவுனியா திருநாவற்குளம் பகுதியில் நேற்று முன்தினம் இரவு இரண்டு குழுக்களுக்கு இடையில் இடம்பெற்ற மோதல் காரணமாக பெரும் பதற்றம் ஏற்பட்டு இருந்ததாக பிரதேச வாசிகள் தெரிவிக்கின்றனர் பின்னர் வவுனியா மாவட்ட அரசியல்துறையினர் சம்பவ இடத்திற்குச் சென்றதன் பின்னர் நிலைமை கட்டுபாட்டினுள் கொண்டுவரப்பட்டது. இரண்டு குழுக்களுக்கு இடையில் ஏற்பட்ட வாய்த்தகராறு பின்னர் கைகலப்பாக மாறியதாகவும் தெரிவிக்கப்படுகிறது சகோதரர்களுக்கு இடையில் ஏற்பட்ட மோதல் காரணமாக வெளிமாவட்டத்தில் இருந்து வந்த நபர் ஒருவரை தாக்க முற்பட்ட போது இந்தப் பதட்ட நிலை ஏற்பட்டுள்ளது. சம்பவம் தொடர்பாக வவுனியா அரசியல் துறைக்கு அறிவிக்கப்பட்டதன் பின்னர் வவுனியா மாவட்ட அரசியல் துறைதுணைப் பொறுப்பாளர் தர்மேந்திரா சம்பவ இடத்திற்கு சென்று நிலைமையினை கட்டுப்பாடடினுள் கொண்டு வந்தார். (21)

# மன்னார் வைத்தியசாலையில் எக்ஸ் - கதிர் இயந்திரம் பழுது

மன்னார் வைத்தியசாலை அண்மையில் பொது வைத்திய சாலையாக தரம் உயர்த்தப்பட்ட போதிலும் பல தேவைகளை இதுவரையும் பூர்த்தி செய்ய முடியாமல் உள்ளது. எக்ஸ் கதிர் கருவி நீண்டகாலமாகப் பழுதுபட்ட நிலையில் சிறிய அடி காயங்கள்,விபத்துக்காயங்களுக்கு கூட எக்ஸ்-கதிர்ப்படம் எடுக்கமுடியாது உள்ளது. இவ் வசதி இல்லாத காரணத்தால் சிறிய நோய்களுக்கும் அநுராதபுரம் வைத்தியசாலைக்கு நோயாளர்கள் கொண்டு செல்லப்படுகின்றனர். இதனால் நோயாளர்களும் அவர்களின் உறவினர்களும் மேலும் சிரமத்துக்குட்படுத்தப்படுகின்றனர். எனவே இக்குறைபாட்டை உடனடியாக நிவர்த்தி செய்யுமாறு மன்னார் பொது அமைப்புக்கள் சுகாதார அமைச்சருக்கு வேண்டுகை விடுத் துள்ளன. (18)

# பாலபட்ட பெந்தியின் மகன் ஆஸி.யில் சொத்துக்குவிப்பு

சனாதிபதியின் முன்னாள் செயலாளர் பாலபட்ட பெந்தியின் மகன் அவுஸ்திரேலியாவில் வாங்கிக் குவித்துள்ள சொத்துக்களின் விபரங்களை அம்பலப்படுத்தியதைத் தொடர்ந்து அந்நாட்டிற்கான இலங்கை உயர்ஸ்தானிகராக வரும் மே மாதம் பொறுப்பேற்கவிருந்த பாலபட்ட பெந்தி அப்பொறுப்பை ஏற்றுக்கொள்வாரா என்று அரசியல் வட்டாரங்களில் பலத்த சந்தேகம் எழுந்துள்ளது. இந்தச் சொத்துக் குவிப்பு விவகாரம் அவுஸ்திரேலியாவில் வசிக்கும் சிங்கள இனத்தவரை அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளது.

பாலபட்ட பெந்தி தற்பொழுது வரையறுக்கப்பட்ட இலங்கா எயார்லைன்ஸின் தலைவராக உள்ளார். அவரது மகன் ஹரேந்திரா பாலபட்டபெந்தி வர்த்தக நோக்கிலான குடியேற்ற விசாவினைப் பெற்று அவுஸ்திரேலியாவுக்கு நுழைந்தார். இவரும் இவரது மனைவி ரோகினி சகுந்தலா பாலபட்டபெந்தியும் மெல்போர்னிற்கு 97 - 98 ஆண்டளவில் சென்றுள்ளார்கள். இதற்கும் 2004 ஆண்டுக்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் 4.2 மில்லியன் அவுஸ்திரேலிய டொலர்கள் அதாவது சுமார் 294 மில்லியன் இலங்கை ரூபா பெறுமதியான சொத்துக்களை வாங்கியுள்ளனர்.

# மன்னார் சாந்திபுரம் பாடசாலைக்கு நிரந்தரக் கட்டடம் இல்லை

மன்னார் சாந்திபுரம் அரசினர் தமிழ்கலவன் பாடசாலை நீண்ட நாட்களாக நிரந்தரக் கட்டடமின்றி கிராம அபிவிருத்திச் சங்க கட்டடத்திலேயே இயங்கி வருகின்றது.

இதனால் பாடசாலையில் கல்வி கற்கும் மாணவர்கள் தமது அடிப்படை தேவைகளின்றி பெரிதும் கஷ்டத்தை எதிர்நோக்கி வருகின்றனர். இதனைக்கருத்தில் எடுக்குமாறு பாடசாலை அதிபர் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார். (18)

### யாழ்...

வர் பேரவை பெண்கள் பண்பாட்டு மையம், பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம், படையினரால் கைதாகிக் காணாமற் போனோர் சங்கம் எனப் பல அமைப்புக்களும் ஆதரவு தெரிவித்துள்ளன.

அந்த வகையில் நாளை பருத்தித்துறை வீதியிலும், நாளை மறு தினம் பலாலி வீதியிலும் 29ஆம் திகதி காங்கேசன்துறை வீதியிலும் 30ஆம் திகதி கண்டி வீதியிலும் தொடர்ச்சியாக இடம் பெறவுள்ளதாக ஏற்பாட்டுக் குழுவினர் அறிவித்துள்ளனர். (33)

## திருத்தம்

கடந்த 24ஆம் திகதி எமது பத்திரிகையில் வெளியாகிய வட தமிழீழக்கடலில் றோலர் இழுவைப் படகைப்பயன்படுத்தி மீன்பிடிப்பவர்கள் மாசி மாதம் முதலாம் திகதி வரை கற்கட தீவுக்கு அப்பால் சென்று தொழில் செய்வதற்கு அனுமதிக் கப்பட்டுள்ளது என்பதற்கு கச்சதீவுக்கு அப்பால் எனத் தவறுதலாக பிரசுரிக்கப்பட்டது என்பதை வாசகர்களுக்கு தெரியப்படுத்துகிறோம். (லோ)

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2004 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 26 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது